வாழ்க உலகெலாம்

ஞானசம்பந்தம்

[தருமபுர ஆதீனத் திங்கள் வேளியீடு]

மலர் 19 | சார்வரி - ஆனி 10—7—60 | இதழ் 8

திருச்சிற்றம்பலம்

போன்றயங் கிலங்கோளிங் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பீஞ்ஞுகா! பிறப்பிலீ!
கோன்றையம் முடியினுய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

சிவ ஞான போதம்

[கட்டுரை 18]

(மலர் 19, இதழ் 7, பக்கம் 367 இன் தொடர்பு)

நெல்லிற்குமியும் புதிதன்று; நிகழ் செம்பினிற்களிம்பும் புதிதன்று எனத் தனித்தனி யியையும்; ஆதலின் ஒருமை பன்மை வழுவாகாது. தோன்மை வேறு. தோன்மையில் உள்ளன வேறு. இரண்டும் முறையே காலப்பழமையும் அக்காலத்தனவும் ஆம். ஆதலின் தோன்மையிலுள்ள வற்றைத் தோன்மை என்ருர். புதுமை அன்று தோன்மையே எனலால் ஏகாரம் பிரிநிலைக்கண் வந்தது. மாயை இறை வனுக்குப் பரிக்கிரக (தோழிற்படுவதற்குக் காரணமாய் நிற்கும் வைப்புச்)சக்தி. அதுவேண்டும்போது உபகாரமாவது

வைப்பாற்றல் என்பதும் உண்டு. வினைக்குத் தோன்மை கூறுவார் இனம்பற்றி மாயை மலங்கட்கும் தோன்மை கூறினர்.

(க) **மூலமலத்தின் காரியம்** மோகம், மதம், அராகம், கவலை, தாபம், வாட்டம், விசித்திரம் என்னும் எழுவகைப் படும். இவற்றுள்,

1 **மோகம்** ஏனைய மதம் முதலிய அறுவகைக் காரியங்களுக்கும் ஏதுவானது. கட்டு (பந்தம்) நீங்கும் அளவும் உயிர்களுடன் இயல்பாய் (சகசமாய்) உள்ளது. மோகம் இல்லாதவழி ஏனைய மதம் முதலியன நிகழா. அதனுல் மோகமே முதன்மையது ஆதலை அறிக. கொள்ளத் தக்கது இது தள்ளத்தக்கது இது என்று நூல்வழியால் அறிந்தும் மகளிர் முதலிய பொருள் (விடயங்)களில் மயங்கு வதற்கு ஏதுவானதே மோகம்.

2 **மதம்** தான்எய்திய மகளிரைத் தானேகொண்டாடிப் புகழ்ந்து இவளின் மிக்கார் எவ்வுலகத்திலும் இல்லைஎன மதித்தற்கு ஏதுவானது. மகளிர்மேல் வைத்துக் காட்டியது உபலட்சணம். பொருள் (விடயங்)தோறும் இவ்வாறு கண்டு கொள்க.

3 **அராகம்** அம் மகளிர்பால் மேலும் மேலும் ஆசை மிகுதற்கு ஏதுவாயது.

4 **கவலை** ஊழ்வலியால் அம் மகளிரை நீங்கியவழிக் கண்ணீர் உகுத்து அழுது பெருந்துன்பம் உற்றுக் கவல் வதற்கு ஏதுவாயது.

5 **தாபம்** அதனுல் உள் வெதும்பித் தபித்தற்கு ஏதுவாவது. [' தாபம் ' என்ற வடசோல்லடியாகத் தபித்தல் என்ற சோல் உண்டாயிற்று. இன்னோரன்ன சோற்கள் பற்பல உள].

6 வாட்டம் அங்கனம் அலறியும் ஆற்றியும் உன் வேதும்புதலால் மூர்ச்சை எய்தி உள்ளமும் உடம்பும் வாடுதற்கு ஏதுவாயது.

7 விசித்திரம் தான் பேற்ற உலக வாழ்க்கையை நோக்குந்தோறும் இவர் எமக்கு உரிமைச் சுற்றத்தார். இவள் உரிமையுடைய மனைவி. ஆசை அணி போன் முதலிய செல்வங்களிற் குறைவில்லை. மனை கழனி முதலிய நிலங்களிற் குறைவில்லை. ஆகலான் இனிப் பேறக்கடவது எனக்கு ஒன்றும் இல்லை. குறைவிலா நிறைவு எய்திய என் குடும்பத்தைக் காப்போர் யாவர் ? என்று இவ்வாறு பலவேறு வகைப்படச் சிந்தை செய்தற்கு ஏதுவாயது.

(உ) வினையின் காரியம் இன்பத் துன்பம் (போகம்) முதலியன.

(ஊ) மாயையின் காரியம் தநு கரண புவன போக (சாதன)ம் ஆகிய நான்கும் (அவற்றின் பேதமும்) ஆம். வள்ளலால் ஆம் எனவே திரோதான சக்தியிருப்பும் பேற்றும். அது மலபரிபாகம் வருவித்தற்போருட்டு மலத்தின் வழிநின்று மோகம் முதலியவற்றைத் தோழிற்படுத்துதலாகிய சிவசங்கற்பத்திற்கு ஏதுவாம். ஆதலின் அதுவும் மலம் என்று உபசரித்துக் கூறப்படும். இவ்வாறு 1 மலம் 2 கன்மம் 3 மாயை 4 மாயேயம் (மாயா காரியங்கள்) 5 திரோதானம் ஐந்தும் பாசபஞ்சகம் என்று கொள்ளப்பட்டன. 'மும்மலம்' 'ஐம்மலம்' என்று வேவ்வேறு இல்லை. முத்தோழிலே விரித்துக் கூறுங்கால் ஐந்தோழில் என்றல்போல்வதே இது. (மாபாடியம் முதற்காரண முடிவுட் காண்க)

'குலங்களைந் தாய்களைந் தாய்என்னைக் குற்றங்கோற் றச்சிலையாம்
விலங்கல்எந் தாய்விட் டிடுதிகண் டாய்போன்னின் மின்னு
யலங்கலந் தாமரை மேனியப்பா ஒப்பி லாதவனே [கோன்றை
மலங்களைந்தாற் சுழல்வன் தயிரிற் போரு மத்துறவே'

என்னும் திருவாசகத்துள் ஐம்மலம் என்றதுணர்க.

இவற்றுள், மாயை சுத்தம் அசுத்தம் என்னும் வேறு பாட்டால் இரண்டாகும். இவ்விரண்டனுள், சுத்தமாயையின் காரியமே அசுத்த மாயை என்பாரும் உளர். சுத்தமாயை போல அசுத்த மாயையும் அநாதியே ஆம் என்பாரும் உளர். சுத்துவமாயை அதோமாயை என்று ஒன்றே இரண்டாயிற்று என்பாரும் உளர். இதல் ஆசிரியர் பலதிறத்தர்.

" முதல்வனது கிரியாசத்தியே சுத்தமாயை எனப்படும் என்பாருமுளர். அக்கிரியாசக்தி முதல்வனுக்குத் தாதான்மிய (என்றும் பிரியாத) சத்தியாகும். சுத்தமாயை பரிக்கிரக சத்தி. நீங்காத ஆற்றலும் நீங்கும் ஆற்றலும் ஒன்றுகா. ஆகாமையின், கிரியாசத்தி சுத்தமாயையாதல் யாண்டையது என்றுழிக" என்றெழுதி யருளினார்கள் மாதவச் சிவஞான யோகிகள்.

சுத்தமாயையினின்றும் கலையைந்தும், வாக்கு நான்கும் சிவதத்துவம் ஐந்தும், சுத்தகாலம் முதல் சுத்தநிலம் முடிய உள்ள தத்துவம் முப்பத்தோன்றும் தோன்றும். அசுத்த மாயையினின்றும் அசுத்தகாலம் முதல் அசுத்தநிலம் முடிய உள்ள தத்துவம் முப்பத்தோன்றும் தோன்றும்.

இத் தத்துவங்கள் அனைத்தும் 1 போது 2 சிறப்பு 3 போதுச் சிறப்பு எனத் தனித்தனி மூவகைப்பட்டு உயிர் தோறும் வேவ்வேறு உளவாம்.

புவனவடிவாகிய தத்துவங்கள் போகநுகர்ச்சியில் எல்லாவுயிர்க்கும் போதுவாய்ப் போகம் பயப்பித்தலின் போது எனப்படும். சூக்கும தேகரூபமாகிய தத்துவங்கள் உயிர்தோறும் வேவ்வேறுய் நின்று போகம் பயப்பித்தற் கருவியாதலின் சிறப்பு எனப்படும்.

தூலதேக ரூபமாகிய தத்துவங்கள் அவரவர் போக நுகர்ச்சிக்குச் சிறப்பு வகையால் நிலைக்களம் ஆதலும் மனைவி முதலியோர்க்குச் சந்தனம் பூமாலை முதலியன போலப் போதுமையாற் போக்கியம் ஆதலும் ஆகிய இரு வகையும் உடைமையின் போதுச்சிறப்பு எனப்படும்.

சுத்தம் அசுத்தம் என்பன (ஒன்றற்கு ஒன்று) மறுதலை யல்ல. மயக்கம் இன்றி அறிவிப்பது சுத்தமாயை. மயக்கி யறிவிப்பது அசுத்தமாயை. இவ்வாறும் ஆசிரியர் கூறினர். (மாபாடியம் முதற்காரண முடிவுட் காண்க). சுத்தமாயை, மாமாயை, குடிலை, குண்டலி, விந்து என்பன ஒருபோருட் கிளவி. அசுத்தமாயை, மாயை, மோகினி என்பன ஒரு போருட் கிளவி. சுத்த ப்ரபஞ்சத்திற்கு முதற்காரணம் சுத்த மாயை. அசுத்த ப்ரபஞ்சத்திற்கு முதற்காரணம் அசுத்த மாயை. சிவதத்துவம் முதலியன சுத்தப்ரபஞ்சம். கலை முதலியன அசுத்தப்ரபஞ்சம். துன்பம் விரவாமல் இன்பமே வினைத்தற்கு ஏதுவாயது சுத்தம். ஏனையது அசுத்தம். இதன் விரிவை மாபாடியத்திற் 'சுத்தமாயை' என்னுந் தலைப்பிற் கண்டுணர்க.

கன்மம் விதை கெடுங்கால் முளைதோன்றும். வித்துக் கேடு முளைத்தோற்றம் என்னும் வினையிரண்டனுள் ஒரு தொழில் மற்றொருதொழிலைத் தோற்றிவிடற்குச் சாத்திரத்தில் எடுத்துக்காட்டாய் இருக்கின்றது. வித்தின் கேட்டின் அங்குரம் (-முளை)போல என்றல் காண்க. வித்தின் நாசத்தில் முளையின் உற்பத்தியாதலின் நாசோற்பத்தி என்பர்.

'நண்ணியிடும் உருவதனுக் கேது வாகி
நாளுபோ கங்களாய் நாசோற் பத்தி
பண்ணிவரும் ஆதலால் அநாதி' (சிவப்பிரகாசம் 28)

என்றதில் 'நாசோற்பத்தி' என்னுந் தொடர் ஏழன் வேற்றுமைத்தொகைநிலையது. உம்மைத்தொகையன்று.

கன்மமும் அநாதி என்பதுபற்றிப் பிரபஞ்சம்போலப் பிரவாகாநாதி என்பாரும் மூவகை வினைக்கும் முதற்காரணம் ஆகிய மூலகன்மம் ஒன்று அநாதி நித்தமாய் உண்டு என்பாரும் ஆகி ஆசிரியர் இருதிறத்தர். அவருட் பின்னவர் கோள்கைக்கு,

'ஏகன் அநேகன் இருள்கருமம் மாயையிரண்
டாகஇவை ஆருதி யில்' (திருவருட்பயன் 52)

என்பதும்,

'ஆணவ முதல் அன் றதுபோற் கருமமும்' (ஞானமிர்தம்)

எனவும் ஒப்ப ஓதுதலே ஏதுவாகும்.

அவ்வினை ஈட்டப்படுங்கால் மந்திரம் முதலிய அத்துவாக்கள் இடமாக முறையானே மனம், வாக்குக் காயம் என்னும் மூன்றால் ஈட்டப்படும். பட்டுத் தூலகன்ம மாய் ஆகாமியம் எனப் பெயர்பெறும். பின்னர்ப் பக்குவம் ஆனவரையும் சூக்குமசன்மமாய்ப் புத்திதத்துவத்தினிடமாக மாயையிற் கிடந்து சாதி, ஆயுள், போகம் மூன்றற்கும் ஏதுவாகும். ஆகி முறையே ஜனகம், தாரகம், போக்யம் என மூவகைத்தாகும். அவை மூன்றும் அபூர்வம், சஞ்சிதம், புண்ணிய பாவம் என்னும் பெயர்பெறும். அது பயன்படுங் கால் ஆதிதைவிகம், ஆத்தியான்மிகம், ஆதிபௌதிகம் என்னும் மூன்று திறத்தால் பலதிறப்பட்டுப் பிராரப்தம் எனப் பெயர்பெறும்.

1 ஆதிபௌதிகம் சடம்வாயிலாக வருவது.

2 ஆத்தியான்மிகம் சடத்தோடுகூடிய சேதனம் வாயிலாக வருவது.

3 ஆதிதைவிகம் ஒருவாயிலானும் அன்றித் தெய்வத் தானே காரணமாக வருவது.

இன்னும் இவ்வினைகள் 1 உலகம் 2 வைதிகம் 3 அத்தியான்மிகம் 4 அதிமார்க்கம் 5 மாந்திரம் என ஐவகைப்படும். பட்டு ஒன்றற்கொன்று ஏற்றம் உடைய தாகும். ஆகி முறையே நிவிர்த்தி முதலிய ஐந்துகலைகளில் அடங்கும். அடங்கி, அசுத்தம், மிச்சிரம், சுத்தம் எனப் படும் போகங்களைப் பயப்பிக்கும்.

1 உலகவினை : — கிணறு, குளம், தண்ணீர்ப்பந்தர் முதலியன செய்தலால் உண்டாவதாய் நிவிர்த்திகலையில் அடங்கிய புவனபோகங்களைப் பயப்பிப்பது.

2 வைதிகவினை :— வேதத்துள் விதிக்கப்படும் அக்கினிட்டோமம் முதலிய வேள்வி முதலியவற்றுல் உண்டாவதாய்ப் பிரதிட்டாகலையில் அடங்கிய புவனபோகங் களைப் பயப்பிப்பது.

3 அத்தியான்மிகவினை :— வேதநெறியாற் செய்யும் பூசை, துறவு முதலியவற்றுல் உண்டாவதாய் வித்தியா கலையில் அடங்கிய புவனபோகங்களைப் பயப்பிப்பது.

4 அதிமார்க்கவினை :— இமயம், நியமம், முதலிய யோகப்பயிற்சியால் உண்டாவதாய்ச் சாந்திகலையில் அடங் கிய புவனபோகங்களைப் பயப்பிப்பது.

5 மாந்திரவினை :— சுத்த மந்திரங்களைக் கணித்தல் முதலிய ஞானப்பயிற்சி விசேடங்களால் உண்டாவதாய்ச் சாந்தியதீத கலையில் அடங்கிய புவனபோகங்களைப் பயப்பிப்பது. இவற்றுள்

1 முன் இரண்டும் அசுத்த தத்துவபுவனங்களுக்கு ஆதாரம் ஆகிய நிவிர்த்திகலை, பிரதிட்டாகலைகளில் அடங் கிய அசுத்தபோகங்களைப் பயப்பிப்பன ஆதலின் அசுத்த கன்மம் எனப்படும்.

2 பின் இரண்டும் சுத்ததத்துவ புவனங்களுக்கு ஆதாரம் ஆகிய சாந்திகலை சாந்தியதீதகலைகளில் அடங்கிய சுத்தபோகங்களைப் பயப்பித்தலால் சுத்தகன்மம் எனப்படும்

3 இடையில் உள்ள அத்தியான்மிகம் மிச்சிரதத்துவ புவனங்களுக்கு ஆதாரம் ஆகிய வித்தியாகலையில் அடங்கிய சுத்தமும் அசுத்தமும் கலந்த (சுத்தாசுத்த) போகங்களைப் பயப்பித்தலால் மிச்சிரகன்மம் (கலவைவினை) எனப்படும்.

இரண்டாவது சூத்திரம் இரண்டாவது அதிகரண விளக்கம் முற்றிற்று.

(தொடரும்)

சீவக சிந்தாமணியில் உள்ள ரசங்கள்

பன்மொழிப் புலவர்,

திரு. வெ. வேங்கடராஜுலு ரெட்டியார் அவர்கள்

ஓய்வுபெற்ற ஆராய்ச்சிப்புலவர், சென்னைப் பல்கலைக் கழகம்)

(மலர் 19 இதழ் 5 பக்கம் 270 இன் தொடர்ச்சி)

பீபத்ஸ ரஸம் (இளிவரல்)

உள்ளத்திற்கு உகப்பல்லாத வாந்தி, புண், தொழு நோயுடல் இவை முதலியன காண்டல் கேட்டல் ஆலம்பன விபாவம். நாற்றம் புழு முதலியன விழுதல் உத்தீபனம். அங்க ஸங்கோசம் நாசி முகம் சுளித்தல் மூடிக்கொள்ளுதல் உமிழ்தல் முதலியன அனுபாவம். அபஸ்மாரம் ஔக்ர்யம் மோஹம் முதலியன ஸஞ்சாரிபாவம். ஸ்தாயிபாவமான ரஸமாகும். போர்க்கள ஜுகுப்ஸை சுவைக்கப்பட்டுப் பீபத்ஸ வருணனையில் பீபத்ஸரஸம் தோன்றும்.

கட்டியங்காரன் படைகளும் சீவகனைச் சார்ந்தோர் படைகளும் பொருது மடிந்த களவருணனையை நோக்குவோம்.

' அஞ்சன நிறநீக்கி யரத்தம்போர்த் தமருழக்கி
இங்குலிக விறுவரைபோன் றினக்களி றிடைமிடைந்த
குஞ்சரங்கள் பாய்ந்திடலிற் குமிழிவிட் டுமிழ்குருதி
யிங்குலிக வருவிபோன் றெவ்வாயுந் தோன்றினவே '

' குடர்வாங்கு குறுநரிகள் கோழுநிணப் புலாற்சேற்றுட்
டோடர்வாங்கு கதநாய்போற் றோன்றின தோடித்திண்டோட்
படர்தீரக் கொண்டேழுந்த பறவைகள் படநாக
முடனேகொண் டேழுகின்ற உவணப்புள் ஒத்தனவே '

என்னுஞ் செய்யுட்களைக் காண்க. இச் செய்யுளில், யானை யுடலினின்று பாயுங் குருதி எல்லாவிடத்தும் பரந்திருத்தலும் இறந்துபட்டோருடைய குடர்களைப் புலால் நாற்றமுடைய நிணச் சேற்றிலிருந்து நரிகள் இழுத்து வாங்குதலும் வீரருடைய

கைகளைப் பறவைகள் கவ்விச்செல்லுதலும் கூறப்பட்டுள்ளன. இவை முதலியன பீபத்ஸரஸத்திற்கு விபாவங்கள் ஆதல் அறிக.

இவ்வாறு அருவருப்புத் தரும் பொருள்களைப் பார்த்தலே யன்றிக் கேட்டலும் பீபத்ஸத்திற்குக் காரணமாகும். சீவகன், தன்னைக் காதலித்த அனங்கவீணை என்பாளுக்கு உடலின் இயல்பினையும் தூய்தன்மையினையும் எடுத்துரைக்கின்றான். அதுவும் ஜுகுப்ஸை என்னும் பாவத்தை உண்டாக்குவதாகும்.

' போதோடு நான மூழ்கிப் பூம்புகை தவழ்ந்து முல்லைக்
கோதைகண் படுக்குங் கூந்தல், குரைவளி பித்தோ டையே
ஏதஞ்செய் மலங்கள் நெய்த்தோ றிறைச்சியேன் பிருள் மூளை
கோதஞ்செய் குடர்கள் புன்றோல் நரம்போடு வழும்பி தென்றான் '

' விழுக்கொடு வெண்ணஞ் சல்லா வுகிர்மயி ருமிழ்கட் பீளைப்
புழுப்பயில் குரம்பை போல்லாத் தடிதடிக் கீழ்ந்த போழ்தில்
விழித்தியார் நோக்கு கிற்பார் பிள்ளையார் கண்ணுட் காக்கை
கொழிப்பரும் பொன்னிற் றோன்றுங் கொள்கைத்தால் கோடியே
என்றான் '

இச் செய்யுட்களிற் கூறப்பட்டுள்ள உடலி னிழிதகவினுல் ஜுகுப்ஸை என்னும் பாவம் தோன்றுதல் அறிதற்பாலது.

அற்புத ரஸம்

லோகாதீதமான வஸ்து, திவ்யமான காட்சியுள்ள கோயில், இந்திரஜாலம், அதிசயமான சித்திரவேலையுள்ள கட்டடம் முதலியன ஆலம்பனவிபாவம். அதைப்போன்ற அபிநயம் ஸ்தோத்ரம் வருணனை நினைப்பு முதலியன உத்தீபனவிபாவம். கண்விழித்துப் பார்த்தல், இமைக்காது காண்டல் சாதுவான பேச்சு, உடல், விரல்அசைதல் முதலியன அனுபாவம். மயிர்க்குச் சிறிதல், கண்ணீர், வியர்வை ஸாத்விகபாவம். ஹர்ஷம் ஆவேகம் ஜடதைசஞ்சாரிபாவம் இவற்றுல் அனுப விக்கப்பட்ட வியப்பு (விஸ்மயம்) அற்புத ரஸமாகும்.

வேடர் கவர்ந்துசென்ற நிரையை மீட்கச்சென்ற படைகள் தோல்வியுற்று மீண்ட செய்தியை யறிந்த சீவகன், ' நன்பால் பசுவே துறந்தார் பேண்டிர் பாலர் பார்ப்பார் என்பாரை

யோம்பேன் எனின் யான் பேடியாவேனுக என்று சூளுரைத்து வேடர்மேற் சென்றான். அவன் வரவு கண்ட நிமித்திகன் 'ஒருவன்றேரினுல் நாம் உடைவோம்' என்று முன்னரே கூறினவன், 'நாம் எதிர்ஏற்குங் காலம் அன்று, போவோம்' என்றான். வேடர் 'இக் காட்டில் நமக்கு வலியவர் இலர்' என்று கூறி, நிரையை விடாது போருக்கு விரைந்தனர்; சீவகன் படைகளை நோக்கி, 'கானவர் என்னுங் கூற்றத்திடைப் படாது ஓடிப்போமின்' என்று கோம்பு ஊதினர். சீவகன் வீரரும் கோம்பு, பறை, சங்கு இவற்றை முழக்கினர்.

'கைவிசை முறுக்கி வீசுங் கொள்ளியுங் கறங்கும் ஏய்ப்பச்
செய்கழற் குரிசி றிண்டேர் விசையோடு திசைக ளெல்லாம்
ஐயென வளைப்ப வீரர் ஆர்த்தனர் அவரும் ஆர்த்தார்
மொய்யமர் நாட்செய் தையன் முதல்விளை யாடி னானே'

சீவகன்றேரின் முழக்கினுலும் சூழ்ந்த துகளின் மயக்கினுலும் வேடர் உள்ளஞ் சுருங்கினர். சீவகன்றேர் கொள்ளிவட்டம் போற் சுற்றிவருதலின் தேர்கள் பல ஒருங்கு வந்தன என்று கருதி,

'புள்ளொன்றே சொல்லு மென்றிப் புன்றலை வேடன் போய்த்தான்
வெள்ளந்தேர் வளைந்த நம்மை வென்றியீங் கரிது'

என்று அனைவரும் ஒருங்குகூடி அம்புமழை சோரிந்தனர். சீவகன் தன் கணைகளால் விலக்கினுன். பின்னர்ச் சீவகன் கணைமாரி சொரிய வேடர் நிரையை விட்டனர். சீவகனது 'அணிசெய் திண்டோள்தா னொன்று முடங்கிற்று. ஒன்று நிமிர்ந்தது; சரம் பெய்மாரிபோல் நின்ற என்ப மற்றப் போருவரு சிலையி னூர்க்கே.

'வாள்வாயு மின்றி வடிவேங்கணை வாயு மின்றிக்
கோள்வாய் மதியம் நெடியான்விடுத் தாங்கு மைந்தன்
றோள்வாய் சிலையி னெலியாற்றேறு மீட்டு'

மீண்டான். மீளும்போது கண்ட மகளிர்,

'அரவுயர் கோடியி னன்ற னகன்படை யனுங்க வென்ற
புரவித்தேர்க் காளையன்ன காளையைப் போலிக என்றூர்'

' கோடையுளு மோருவன் கோல்லுங் கூற்றினுங் கோடிய வாட்
படையுளுமோருவன் என்று பயங்கேழு பனுவ னுண்ணூல் [போர்ப்
நடையுளார் சோல்லிற் றேல்லாம் நம்பிசீவகன்கட் கண்டாம் '

என்று வியந்து புகழ்ந்தனர் சிலர்,

' விண்ணகத் துளர்கோல் மற்றிவ் வென்றிவேற் குருசி லோப்பார்
மண்ணகத் திவர்க ளோவ்வார் '

என்று வியப்புற்றனர்.

இப் பகுதியில் அரசன் படைகள் போருது தோற்று இரிந்த பின், சீவகன் தான் ஒருவனே தேரிற் சென்று அவ்வேடர்களை அஞ்சுவித்து ஓட்டி நிரைமீட்டுவந்த வென்றி காரணமாக வியப்பு (விஸ்மயம்)த் தோன்றி அது நிலைபேற்று அற்புத ரஸம் ஆயிற்றென்று கோள்ளலாகும். இனி அரசரேவாலும் இயலாத திரிபன்றி எய்த திறனும் அற்புத ரஸத்ததாகும். நிற்க.

(தோடரும்)

குமரகுருபரன் ஆண்டுச் சந்தா 1 — 50

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ குமாகுருபர சுவாமிகளினுடைய திருப்பேயர்பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலிய வற்றை எளிய நடையில் தெளியச்செய்யும் ஆராய்ச்சி விளக்கத்துடன் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின்வண்ணம் உயரிய இவ்விதழ் வேளிவருகிறது.

விலாசம் :- நிர்வாக ஆசிரியர், உயர்திருவாளர்.
T. M. குமாகுருபரன் பிள்ளை B.A., B.L., அவர்கள்,
" குமாகுருபரன் " ஆபீஸ், ஸ்ரீ வைகுண்டம்

இரண்டாம் இராசாதிராசனது : : : : திருவொற்றியூர்க் கல்லெழுத்து

சிவநேறிச்செல்வர்,
வித்துவான், திரு. கே. எம். வேங்கடராமையா M. A., B. O. L.,
பிரின்ஸிபால், சேந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.

(மலர் 19 இதழ் 7 பக்கம் 376 இன் தொடர்ச்சி)

இத் திருவிழா பங்குனியுத்திரப் பெருவிழாவில் [1] ஆரும் திருநாளில் ஆயிலிய நக்ஷத்திரம் கூடிய நாளில் நடைபேற்றது என்று இக் கல்லெழுத்திலிருந்து அறியப்பெறுகிறது " இவ் வாலயத்தில் தற்போது மாசி மாதத்தில் மக நக்ஷத்திரம் தீர்த்தவாரியாக வைத்துப் பிரமோற்சவம் நடைபேற்று வருகிறது. இது நீண்ட காலமாக மாசியில்தான் நடந்து வருகிறது என்று சொல்லுகிறார்கள். அவ்வுற்சவத் தொடர்ச்சி யில் 9 ஆவது நாளில் (அதாவது ஆயில்ய நக்ஷத்திரத்தில்) மாலை சுமார் 6 மணிக்கு இவ்வற்புதத்தை நடத்திக் காட்டு கிறார்கள். அப்போழுது எழுந்தருளிக் காட்சிகோடுக்கும் உற்சவமூர்த்தி (நின்ற கோலம்; சுவாமி பக்கத்தில் ரிஷபம்; அடுத்து அம்பிகை) தற்போது ஒற்றீசுவரர் [2] கோயிலில் எழுந் தருளியுள்ளார். சபதம் செய்துகோடுக்க எழுந்தருளும் மூர்த்தி கலியாணசுந்தரர் [3]; இவர் ஆலயம்தான் மகிழமரத்துக்குப் பக்கத்தில் உள்ளது; இவர் நின்ற கோலம்; ஒரு கரம் மேலே தூக்கப்பேற்றுள்ளது. ரிஷபாரூடர் வந்து மகிழடியில் நின்றதும் கலியாணசுந்தரர் எழுந்தருளி வருகிறார்; தனி விமானம்.

---

[1] திருவோற்றியூரில் பங்குனியுத்திரப் பெருவிழா நடைபேற்று வந்ததை " ஒத்தமைந்த உத்திரநாள் தீர்த்தமாக ஒளி திகழும் ஒற்றியூர் என்கின்றாரே " என்ற அப்பர் திருப்பாடலினால் அறியலாம்.

[2] ஒற்றீசர் - இது கோயிலில் வடமேற்கு மூலையிலுள்ளது. திருவோற்றியூரான் அடிமை என்பவரால் திருப்பணி செய்யப் பேற்றது.

[3] சுந்தரமூர்த்தி சுவாமிகள் (உற்சவமூர்த்தி).

மகிழைச் சுற்றிவந்து சபதம் செய்துகோடுப்பதாகப் புராணம் கூறும். அன்று கூட்டம் அதிகமாக மகிழமரத்து மேடையிலும் அதனைச் சுற்றிலும் நின்றுகோள்வதால் கல்யாணசுந்தரர் மூன்று முறை முன்னும் பின்னும் ஆக மகிழமரம் முதல் ஒற்றீசர் சந்நிதிவரை போய்வருவது வழக்கம்'' [4].

படம்பக்கநாதர்

திருமகிழின் கீழ்த் திருவோலக்கம் செய்தருளாநின்றவர் படம்பக்கநாதர் என்று கல்லெழுத்தில் உள்ளது. (ஆனல் இப்போழுது திருமகிழுக்கு வருபவர் ரிஷபாரூடர் என அறிய வருகிறது. '' ஒற்றியூரில் உபமன்னிய முனிவரிடம் சிவ தீக்கை பெற்றுப் பூசித்த வாசுகியைத் தமது திருவுருவில் சேர்த்து அமர்த்திக்கொண்டு அந்த அடையாளங்களுடன் இன்றும் விளங்க வீற்றிருத்தலின் சுவாமிக்குப் படம்பக்க நாதர் என்று பேயர்வந்தது''. '' சுவாமி சந்நிதிக்குத் தெற்கில் தனி மண்டபத்தில் மாணிக்கத்தியாகர் எனப்படும் உற்சவமூர்த்தி சோமாஸ்கந்தராக எழுந்தருளியுள்ளார் இம் மண்டபத்துக்குப் பின்னர் ஒரு சிறு தனிக் கோயில் உள்ளது. அதனைக் கௌடீஸ்வரர் என்று சொல்லுகின்றனர். ஆனல் அதனைப் பார்த்தால் சிவமூர்த்தங்கள் இருபத்தைந்துள் ஒன்ரு யிருக்கக்கூடும் என்று கருதலாம். 4 கரங்களுண்டு; யோகா சனத்தில் அமர்ந்த கோலம்; வலது கரம் மேல்நோக்கி யிருக் கிறது; அதில் சூலம்போன்று ஒன்றிருக்கிறது'' [5]. இக் கௌடீசுவரர்கோயிலே படம்பக்கநாதர் ஆலயம் என்றும்[6] அது வீராசேந்திரசோழனது ஐந்தாம் ஆட்சியாண்டில் (கி. பி. 1068ல்) அதிகாரி ராசேந்திரமூவேந்தவேளான் என்பவரால் கற்றளியாக்கப்பெற்றது[7] என்றும் ஆராய்ச்சியாளர்

---

[4] இப்பகுதியில் கண்ட பல நடைமுறைக் குறிப்புக்களைத் தீரு. க. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் அன்புடன் உதவினர்கள்.

[5] இக் குறிப்புக்களையும் திரு. க. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் உதவினர்கள்.

[6] ARE II Para 6 and 32 of the year 1913.

[7] ஷெ; 232 of 1912.

கூறுவர். மேற்குறித்தவாறு யோகாசனத்தில் 4 திருக்கரங் களுடன் அமைந்த திருமேனியைப் படம்பக்கநாதர் என்று சமயநேறி முறைகள் நன்கறிந்த பேருமக்கள் அக்காலத்துக் கல்லெழுத்துக்களில் எங்ஙனம் குறித்தனர் என்று தேரிய கிற்றிலது.

கோயிலதிகாரிகளும் பிறரும்

ஆளுடையநம்பி ஸ்ரீபுராணம் கேட்டவர்களுள் இராசாதி ராசனும், சதுரானனபண்டிதனும், வாகீசுவரபண்டிதனும் ஆவர் என்று கண்டோம். இவர்களோடு ஸ்ரீ மாகேசுவரக் கண்காணி திருவீதி வெளியிடங்கொண்டான் என்றவரும் அங்கு இருந்தார். மாகேசுவரர் என்றது சிவனடியார் என்பது. "கோயில் நிர்வாகத்தில் பொறுப்புள்ள சிவனடியார் சபை"யின் மேற்பார்வையாளர் மாகேசுவரக்கண்காணி எனப்பெறுவர். அங்கு இருந்தவர்களில் இன்னொருவர் சேயங்கொண்ட சோழ மண்டலப்[8] பிடாரன் என்பவர் ஆவர். பிடாரன் என்பது திருக் கோயில்களுள் திருப்பதிகம் விண்ணப்பிப்பவரை (தேவாரம் ஓதுபவரை)க் குறிக்கும். இன்னொருவர் கோயில் நாயகம் படம்பக்கநாயகபட்டர் என்பவர். இப்பெயர் படம்பக்கநாயகர் திருப்பெயரைக்கொண்டவர் என்றே, படம்பக்கநாயகரைப் பூசை செய்யும் உரிமைபெற்ற சிவாசாரியர் என்றே பொருள் படும். இவர் கோயில் நாயகம் என்ற அலுவலை மேற் கொண்டவர்; பூசகர்களுள் இவர் தலைவர்போலும். இந்நிகழ்ச்சிக் காலத்தில் ஸ்ரீ காரியம் ஆராய்கின்ற அலுவலில் இருந்தவர் அரியபிரான்பட்டன் என்பவ ஆவர். ஸ்ரீகாரியம் எனறது கோயில்காரியம் என்பதாம்.

வடமொழிப் பகுதி

இக் கல்லெழுத்தின் முதற்கண் காணும் வடமொழிப் பகுதியுள் சில எழுத்துக்கள் சிதைந்துவிட்டன. காணும் பகுதி பின்வருமாறு :-

---

[8] தொண்டைமண்டலம் முதல்இராசராசன் காலமுதல் சேயங்கொண்ட சோழமண்டலம் எனப்பெற்றது.

வ்ருகூணா ஹத விம்ஶதி கூடிஸெஹஸ்ரே வ்ருஷலஸ்ய வடுகஸ்ய ஸஹ.....ரஹஂ ॥

இதன் பொருள் :- விற்கப்பட்டது நூற்றிருபது போற் காசுகளினுல் விருஷலனுகிய சோமன் என்னும் பேயருடைய வனுக்கு வடுகப்பேரு[ம்பாக்கம்]. விருஷலர் என்பது பெருங் குடிமக்களுக்கும் இழிந்தவர்களுக்கும் பிறந்தவர் என்று பொருள்படும்; தமிழ்ப் பகுதியில் பேரியான்சோமன் எனப் பேற்றிருத்தலின் 'விருஷலஸ்ய' என்பதற்குப் 'பேருமை பொருந்திய' என்று பொருள் கூறுதல் பொருந்தும்.

முடிப்புரை

திருமகிழடிசேவைத் திருவிழாக் காலத்தில் ஆளுடைய நம்பி ஸ்ரீபுராணம் (அதாவது பேரியபுராணப் பகுதி) வாசித்து விளக்கப்பேற்றது என்று அறிகிறேம். அப் பண்டைப் பழக்கம் இந்நாளிலும் நிகழின் சாலவும்பொருந்தும். இறைவன் திருவருள் புரிவாராக !

" ஐயனே முருகா "

கவி. " வே, நடாதூர்நம்பி " புதுவை.

இராகம் - ஷண்முகப்ரியா] [தாளம் - ஆதி

பல்லவி

ஷண்முக வடிவேலனே—கந்தா
சந்ததம் அருள்செய்குவாய்..... (ஷண்)

அநுபல்லவி

பண்ணிசை நாதமதில் பாவிடும் வேதமதில்
நண்ணியே வாழுகின்ற நாதனே வேதனே

சரணம்

நான்முகன் சேருக்கினை நலியவே வைத்தநல்
தேன்மொழித் தோழனே திருப்பரங் கிரியனே
வேன்முரு கையனே ஏனின்னுந் தாமதம் ?
வேண்டுதல் கேட்டுமே விரைகுவாய் அன்பனே (ஷண்)

வாழும் வழி

திரு. K. மருதப்பிள்ளை அவர்கள், குத்தாலம்.

(மலர் 19 இதழ் 5 பக்கம் 272 இன் தொடர்ச்சி)

22. அநியாயமாகச் சம்பாதித்த சொத்துக்கள் தவிர நியாயப் பிசகான காரியங்களைச்செய்வது. இவைகள் நாசவேலைகளுக்கே தவிர வேறில்லை. திருதராஷ்டிரன், ராவணன் நமக்கு ஒன்றும் செய்யாவிட்டாலும், அவர்கள் பெயரைச் சொன்ன மாத்திரத்தில் நமக்குக் கோபம் ஜனிக்கிறது. ஸ்ரீ ராமர் தர்மபுத்திரர் இவர்கள் பெயர் கேட்டதும் ப்ரீதி உண்டாகிப் பூஜிக்கிறோம். தேவராகிய ஸ்ரீ ராமருக்குப் புலி, கரடி முதலிய துஷ்ட மிருகங்கள் சகாயம் செய்தன. சத்திய சந்தரான பாண்டவர்களுக்குக் காட்டில்கூட நல்ல போஜனங்கள் கிடைத்து சுகமாய் இருந்தார்கள். ஆதலால் சத்யம், தயை மனிதனுடைய க்ஷேமத்திற்கு முக்கியமாகும்,

23. சூதாட்டமுள்ளவன், குடிகாரன், மோசம் செய்பவன் இவர்களால் அபாயமே ஒழிய க்ஷேமமில்லை அப்பேர்ப்பட்ட வர்களால் வேண்டியவரையில் உபகாரம் உள்ளதாய் இருந்த போதிலும்கூட இடம் கொடுக்கக்கூடாது.

24. வீட்டில் ஒரு தெய்வ பக்தன் இருந்தால் அந்தப் புண்யம் மூன்று தலைமுறை வரையில் எல்லோரையும் காப் பாற்றுகிறது. எல்லோரும் தெய்வபக்தர்கள் நியாயவாதிகளாக இருந்தால் அந்த வீடே இந்திரபவனம் ஆகிறது.

25. எந்த வேலை செய்துகொண்டிருந்தபோதிலும் முதலில் காகிதத்தில் குறித்துப் பார்த்துக்கொண்டு, அனுபவஸ்தர் களான 4, 8 பேர்களுக்குத் தெரிந்து, மனத்திற்கு வேலைக் கிரமங்கள், அர்த்தமான பிறகு வேலைக்கு யத்தனப்பட வேண்டும். வீடு கட்டப்போகிறவர்கள் அந்தந்த அளவுக்குத் தகுந்தபடி மரங்களை 4 வருஷங்களுக்கு முந்தியே வெட்டி வைக்கவேண்டும்.

26. கூலிக்காரர்களுக்கு அட்வான்ஸ் கொடுத்து அநேகர் கெட்டுப்போய்விட்டனர். நம்முடைய பணம் முந்தியே அவர்களுக்குக் கிடைத்துவிட்டால் நமது இஷ்டப்படி கண்டிப்பாய் நடத்தமுடியாது. எப்படிப் பார்த்தபோதிலும் அட்வான்ஸ் கொடுத்தால் நஷ்டம்தான். அபாயம் இருக்கலே இருக்கிறது. ஒரே சமயம் அப்படி அனுகூலமானலும், பிந்தியாகிலும் தோந்தரவுகள் இருப்பதால், அட்வான்ஸ் கொடுப்பதில்லை என்று எல்லோரும் சத்யம் செய்து கொள்ளவேண்டும்.

27. ஜாமீன் கொடுப்பது இந்தக் காலத்திற்கு நல்லவேலை அல்ல.

28. காப்பி என்பது நம்முடைய ஜனங்களிடம் விசேஷமாகப் பரவி, புத்தியையும் சக்தியையும், தேகத்திடத்தையும், கெடுத்து, தரித்திரத்தையும், சோம்பலையும் கொடுத்து வருவது எல்லோருக்கும் அநேகமாகத் தெரிந்திருக்கிறது. திடமனதுடன் காப்பிப் பழக்கத்தைவிட முயன்றால் நம்முடைய கால்பங்கு கஷ்டம் நிவர்த்தியாகும்.

29. நமக்கு நியமிக்கப்பட்ட வேலைகளைச், சிரத்தையுடன் நம்பிக்கை வரும்படி செய்துவந்தால், எஜமானர் பிரியப்படி கௌரவமும், ஊதியமும் கிடைக்கும். மோசமும், உதாசீனமும் அதிகப்பட்டால் உள்ளதும் போய்விடும்.

30. தன்னைப் பேரிய மனுஷ்யன் என்று எண்ணவேண்டியதன் போருட்டு வீணுகப் பொருள் செலவு பண்ணுவது, பிறருக்கு இம்சை செய்வது, துர்விவகாரங்களைக்கொண்டு வருவது இப்படியான பெருந்தீமைகள் ஒரு பர்லாங்குக்கு அப்பால் இருப்பவனுக்குத் தெரிந்திடுவதில்லை. ஒரு மைலுக்கு அப்பால் இருக்கப்பட்டவனிடம் லக்ஷியம் போகிறது. தர்மமாய் நடந்து கொண்டு பயன் கருதாமலும், பட்சபாதமில்லாமலும் உபகாரம் செய்பவனைப் பெரியமனிதன் என்று எண்ணவேண்டும்.

31. ஒரு வீட்டுக்குத் தேவையான விசேஷ காரியங்களைச் செய்வது வீட்டில் உள்ளவர்கள் எல்லோரும் தெரிந்துகொள்ள வேண்டியதன் போருட்டு, வீட்டு எஜமானர் அப்போதைக்கப் போது வேலைகளை மாறுதல் செய்து அப்பியாசப்படுத்த வேண்டும். சோம்பலால் காலம் கழிக்கப்புட்டவர்களுக்குத் தகுந்த காரியங்களை நியமித்து வேறு வேலைக்குப் போக வேண்டும்.

கோயில்களும் மடங்களும்

கோவைகிழார்,
திரு. C. M. இராமச்சந்திரஞ் செட்டியார் B. A., B. L., அவர்கள்

(2) நிதி நிர்வாகம்

''கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்பது தமிழர் முதுமொழி. ஆகவே, எந்த இடத்தில் புதுக் குடியிருப்பு ஒன்றைக் கட்டின போதிலும் முதலில் கோயிலைக் கட்டியே அதனைச் சுற்றிக் குடியிருப்பைக் கட்டி வாழத் தோடங்கினர்கள். சில இடங்களில் கோயில்கள் ஆற்றங் கரையிலும் சிறு குன்றுகளின் மீதும் கடற்கரையிலும் ஏற் பட்டன. அவ்வித இயற்கையமைப்புக்களால் அக்கோயில் களுக்குப் பெருமை மிகுதியாயிற்று. அக்கோயில்களைச் சுற்றிச் சிற்றூர்களை அன்றிப் பேரூர்களும் உண்டாயின. சமய அடி யார்கள் சிலகோயில்களைச் சிறப்பித்தார்கள். அழகிய உணர்ச்சி ததும்பிய பாடல்களை அருளிச் செய்தார்கள். பல அற்புதங்களை இயற்றினர்கள். அக்காரணங்களினுலே அக் கோயில்களுக்கு ஒப்பற்ற பெருமை ஏற்பட்டது. சில ஊர்கள் அரசர்களின் தலைநகரங்கள் ஆயின. அவைகளுக்கு மேன் மேலும் பெருமை கிடைத்தது. இந்த வகையில் சிறு கோயில் பெருங்கோயில்கள் ஆகி அவைகளைச் சுற்றிலும் பேரிய நகரங்கள் வளர்ந்தன. இந்த வளர்ச்சியில் கோயில்களால் நகரங்களும், நகரங்களால் கோயில்களும் சிறப்புற்று ஒன்றுக்கொன்று பேருதவியும்பெற்று ஓங்கின. இவ்விதம் வளர்ந்த நகரங்கள்தான் மதுரை, திருச்சி, தஞ்சை, காஞ்சி, பூம்புகார், கடல் மல்லை முதலிய பண்டைப் பதிகள்.

ஆலயங்கள் பலவகைப்பட்டன. ஒரு தனி அரசமரத்து மேடையில் வணங்கப்படும் சிறு உருவ மூர்த்தி முதல், ஏழு மதில் படைத்ததும் பேரிய நகரத்தை உட்கோண்டதுமான தலைநகர்க் கோயில்வரை அளவிறந்த விதங்களாக அமைந்து இருக்கின்றன. மனிதனுடைய நாகரிக வளர்ச்சிக்குத் தக்கபடி இக்கோயில்கள் தோன்றியிருக்கின்றன. பண்டைக் காலத்தில் அரச மரத்து மேடையின் மேல் உருவத்தை நட்டு வழிபாடு

செய்வதே போதுமானதாக இருந்தது. நாளடைவில் அம் மேடையின்மேல் பந்தல் கட்டப்பட்டது. பிறகு கூறைக் கோட்டம். பிறகு வில்லை இல்லம். பிறகு சேங்கல் கட்டடம். பிறகு கருங்கல்கிருகம். பிறகு அழகிய விசித்திர விமானம். முடிவில் பலவித மண்டபங்கள், மதில்கள், கோபுரங்கள், குளங் கள், நந்தவனங்கள் முதலிய சேர்ந்து பெரிதாக வளர்ந்தது. மனிதன் தான் வாழும் வீட்டைச் சிறிய குடிசையிலிருந்து பணம் ஏற ஏற மாளிகையாக மாற்றிக்கொள்வதைப் போலத் தான் வழிபடும் கடவுளுக்கும் அவ்வாறே இருப்பிடம் கட்டி அங்கு வணங்கினான். இவ்விதமான வளர்ச்சிகோண்ட பாகு பாட்டை இன்றைக்கும் காணலாம்.

இனி வழிபாட்டுச் சடங்குகளிலும் இவ்வாறே காணலாம். அரசமரத்துப் பிள்ளையார் கோயிலிலே பூசாரி வேண்டியதில்லை. பணச்சேகரிப்பும் வேண்டியதில்லை. வழிபடுகிறவர்கள் தேங் காய், பழம், சூடம் வைத்துத் தண்ணீர் வார்த்துத் தாங்களே தொழுது வருவார்கள். ஆனால் பெரிய கோயில்களிலோ பல விதமான சடங்குகளும் திருவிழாக்களும் உண்டு. நித்திய நைமித்திக விசேஷ விழாக்கள் நடைபெறும். அவைகளுக்குப் பெரும் தொகை வேண்டியிருக்கும். அவைகளை நடத்தச் சிப்பந்திகளும் அதிகாரிகளும் வேண்டும். இவ்விதமான நிர் வாகம் நடத்த சொத்துக்கள் வேண்டியிருக்கும். நமது நாட்டில் கோயிலின் வளர்ச்சியைப் பின்பற்றியே சொத்து சேகரிப்பும் நிர்வாக வளர்ச்சியும் இயற்கையாகவே ஏற்பட்டிருக் கின்றன. அவ்வளர்ச்சி மக்களின் நாகரீக உயர்ச்சியையும் சமய ஈடுபாட்டையும் விளக்கிக் காட்டுகின்றன.

அரசமரத்துப் பிள்ளையார் கோயிலுக்குச் சொத்து இல்லை. நாளுக்கு நாள் ஆகக்கூடிய செலவும் இல்லை. ஆனால் அக் கோயிலின் வளர்ச்சி பெருகப் பெருக கட்டிடங்களுக்குப் பணமும் திருவிழாக்களுக்கு வருவாயும் வேண்டி வந்தன. கட்டடங்களை அரசர், அமைச்சர், செல்வந்தர்கள், வியாபாரிகள் பணம் உதவிக் கட்டினார்கள். திருவிழாக்களை நடத்தப் பண மும் நிலமும் தந்தார்கள். இவ்விதம் செய்யப்பட்ட தானங்கள் பலவிதங்களாக இருந்தன. பொன்காசுகள், ஆடுகள், கறவை மாடுகள், நன்செய் புன்செய் நிலங்கள், வரிகள், விளையும் பண்டங்கள், விலையுயர்ந்த மணிகள் முதலியன தரப்பட்டன.

பிரார்த்தனை அல்லது வேண்டுகோள் செய்பவன், பணம், ஆடு முதலியவைகளைத் தருவான். விளக்கு வைத்தல் திருவிழா நடத்துதல், சந்தி செய்தல், சாந்தி கழித்தல், முக்கால வழி பாடு இயற்றுதல் இவைகளை நடத்துபவன் நிலம் தருவான். அரசன் தன் கோரிக்கையை உத்தேசித்துக் கிராமத்து வரிகளைக் கோயிலுக்கு அர்ப்பணம் செய்தான். இவ்வரிசளும் குடிக் காணம், வெறும் பாட்டம், மீன்பாட்டம், தறிவரி, குயவரி, சந்தைவரி, முதலான பல வரிகளும் சேர்ந்தன. முன் காலத்தில் தேவதானம் என்ற பேயரில் வழங்கிய இந்தப் பலவகைத் தானங்கள் இப்போது மானியம், இனம் என்ற பெயர்களினால் வழங்கி வருகின்றன. தற்காலத்தில் உள்ள பெருங் கோயில் களுக்கு எல்லாம் இவ்வாறு பண்டைக்காலத்தில் ஏற்பட்ட மானியங்களே பெரும்பான்மையான சொத்துக்களாக இருக் கின்றன. இவைகளுடைய நோக்கம் நித்திய நைமித்திக விசேடச் சடங்குகளை நடத்துவதே என அறியவேண்டும்.

ஆலயங்களிலே மூலத்தானமூர்த்திக்கு வழிபாடும் திருவிழாக் களும் நடத்துவது மாத்திரமன்றி பரிவார தேவதைகள், சமயா சாரியாகள், நாயன்மார்கள், ஆழ்வார்கள் இவர்களை ஏற்படுத்தி அவர்களின் வழிபாட்டிற்கும் சம்பாவனைக்கும் நிலங்களைத் தானம் செய்து வந்தார்கள். நந்தவனங்களை வைத்து அவை களைப் பரிபாலனம் செய்வதற்கும் குளங்களைத் தோட்டு தெப்ப உற்சவங்கள் நடத்துவதற்கும் தேவாராதித் திருப்பாடல்களை ஓதிவைக்க ஓதுவார்களை நியமித்து அவர்களுக்கு ஊதியம் தரு வதற்கும் சமயப் பாடசாலைகள் வைத்தியசாலைகள் சிற்ப நூல் ஓவியம் ஆடல்பாடல் இன்னிசை இவைகளைப் போற்றுவதற்கும் நிலங்களைத் தானம் செய்ததுண்டு. இவைகளின் நோக்கங்கள் கெட்டுப் போகாதவண்ணம் பல நிபந்தனைகளும் ஆணைகளும் இட்டுக் கல்வெட்டு செப்பேடு இவைகளில் பதிப்பித்தார்கள். இந்த வகையில் வந்த சொத்துக்கள் ஆலயங்களுக்குச் சேர்ந்தன.

அவ்வாறு ஆலயங்களுக்குச் சேர்ந்த சொத்துக்கள் ஆலயக் கணக்கர்களிடம் பதிவு செய்யப்பட்டு ஆலயத்தின் பண்டாரத்தில் சேர்க்கப்பட்டன. பண்டைய ஆசாரத்தின்படி இச்சொத்துக்கள் ஆலய பரிபாலன மூர்த்தியான சண்டேசுரர்

பேரில் எழுதப்பட்டன. உண்மையில் மண்டாரத்தின் பார்வையாளராகிய கணக்கனே பார்த்து வந்தான். சிற்சில சமயங்களில் அவன் மோசடி செய்யும் பட்சத்தில் அரசனே அதனைக் கண்டுபிடித்துத் தண்டிப்பதற்காக அமைச்சர்களை நியமித்ததுண்டு. அவ்வாறு 13ம் நூ-ல் குலோத்துங்கன் III காலத்தில் ஒரு பரிசோதனை விசாரணை நடந்திருக்கிறது. அப்படியிருந்தும் பல பேருங்கோயில்களில் நிலங்கள் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போய்விட்டன. மேற்பார்வை அவ்வவ்வூர் சபையார்களே பார்த்து வந்தார்கள். ஆகவே சிற்றூர்களில் பராதீனங்கள் மிகுதியாக இருக்கவில்லை.

ஆலயங்களைப் போலவே மடங்களுக்கும் பலவிதங்களில், சொத்துக்கள் சேர்ந்தன. மடங்கள் பெரும்பான்மையாக 15. 16-ம் நூற்றாண்டுகளில் முன்னேற்றம் அடைந்தன. சிறந்த துறவிகள் அவைகளை ஏற்படுத்திச் சமய நூல்களை ஆராய்ந்து தம் மாணாக்கர்களுக்குச் சமய ஞானத்தை ஊட்டுவதற்காகத்தான் இவைகள் ஏற்பட்டன. அவைகளில் துறவிகளும் சீடர்களான தம்பிரான்களுமே இருந்து வந்தார்கள். சமயப் பிரசாரத்தில் ஈடுபட்டு வந்ததினால் அரசர் முதலியோர் அம்மடங்களுக்கு நிலம் முதலிய அசையாப் பொருள்களை மானியங்களாகக் கொடுத்தார்கள். அன்ன விசாரம் இன்றிச் சமயப்பணி செய்வதற்காக இத்தானங்கள் செய்யப்பட்டன. காலடைவில் இவைகள் பெருகிப் பெருஞ் செல்வ நிலயங்கள் ஆகிவிட்டன. மடச்சொத்துக்களை மடாதிபதியே பரிபாலித்து வந்தார். ஆனால் சீடர்களாகிய தம்பிரான்களும் நிர்வாகம் செய்யக் கார்யஸ்தம்பிரான் என்ற ஒருவரும் இருப்பார். சிலமடங்களில் மடச்சொத்துக்களைப் பரிபாலிப்பதன்றி அருகில் உள்ள ஆலயங்களையும் பார்த்துவர விடப்பட்டனர். ஆகவே அவ்வாலயச் சொத்துக்களும் அம்மடங்களுடைய பரிபாலனத்துள் வந்து விட்டன. இந்த வகையில் நிர்வாகம் மிகப் பெரியதாகி விட்டது.

நமது மாகாணத்தில் உள்ள கோயில்கள் மடங்கள் இவைகளின் மொத்தம் 27,000. இவைகளில் சிறு கோயில்களை விட்டால் பண வருவாய் உள்ள பெரும் நிலயங்கள் 12552. இவைகளிலே 1000க்குக் கீழ் 7994கு, 1000 - 3000க்குள்

2664ம், 3000க்கு மேல் 1189ம் ஆகமொத்தம் 11847 கோயில்கள் உள்ளன. மடங்களிலே 1000க்கு கீழ் 94ம், 1000 - 3000ல் 41ம், 3000 மேல் 49ம் ஆக 184 மடாலயங்கள் உள்ளன. கட்டளைகளிலே 1000க்கு கீழ் 345ம், 1000 - 3000 - 83ம், 3000க்கு மேல் 93ம். ஆக மொத்தம் 521 கட்டளைகளும் - ஒட்டுமொத்தம் வருவாய் உள்ளன. அறநிலையங்கள் 12,552 இருக்கின்றன. இவைகளிலிருந்து 100க்கு ரூ. 3 வீதம் வரும் கட்டளை வருவாய் 838000 ஆகிறது. ஆகவே அறநிலையங்களில் மொத்த ஆண்டு வருவாய் ஆ79,00,000 ரூ. இவைகளில் இருபது மடங்கு வீதம் சொத்து மதிப்பு 55¾ கோடி ஆகும்.

இத்தனை மதிப்புள்ள அறநிலையங்களின் சொத்துக்கள் எவ்வாறு நிர்வகிக்கப்படுகின்றன எனக் கேட்கலாம். ஆங்கிலர் வந்த முதலில் தாங்களே ரிவின்யு இலாகா மூலமாகக் கோயில்களைப் பரிபாலித்தார்கள். 1840ல் அதைவிடுத்து தருமகர்த்தர்கள் வசம் ஒப்புவித்தார்கள். 1860ல் ஆலய கமிட்டிகளை நியமித்தார்கள். சென்னையில் அவைகள் சரியாக வேலை செய்யாததினுல் 1926ல் அறநிலையப் பாதுகாப்புச் சட்டம் ஏற்பட்டது. அது சில ஆண்டுகளில் பல சீர்திருத்தங்கள் அடைந்தது. அதன்படி அறநிலையப் பாதுகாப்புச் சபை ஒன்று ஏற்பட்டது (H. R. E. Board). ஒரு தலைவரும் மூன்று காப்பாளர்களும் ஏற்படுத்தப்பட்டனர். நிலையங்களின் கணக்கு வழக்குகளைப் பரிசோதித்துக் குற்றங்களை நீக்கி நல்வழிக்குக் கொண்டு வருவது இவர்கள் பொறுப்பு. இவர்களின் கீழ் நூற்றுக் கணக்கான சில்லறை சிப்பந்திகள் உண்டு. இந்தத் தாபனத்தை நடத்த 100க்கு 1½. 3 என்ற வரிகளை வாங்கி வந்தார்கள். இவர்களே ஆலய அதிகாரிகளையும் தருமகர்த்தர்களையும் நியமித்தார்கள். இந்த முறை 20 ஆண்டுகளாக நடைபெற்றதில் நிர்வாகம் செவ்வைப்படவில்லை என்று கருதி அமைச்சர்கள் புதிதாக ஒரு மசோதாவை வெளியிட்டிருக்கிறார்கள். அதன்படி நிலையங்களிலிருந்து வாங்கும் வரி (3+1½ வீதம்) அரசியலாருக்குச் சேர்ந்தது. அரசியலே பரிபாலனத்திற்குப் பொறுப்பாளி. சபை எடுத்து விடப்படும். அதற்குப் பிரதியாக அரசியல் சிப்பந்திகளே புது இலாகாவாக நியமிக்கப்படுவார்கள். இவ்விதம் செய்தால் முழுநம்பிக்கையும் உறுதியும் ஏற்படும் என்பது கருத்து.

இவ்வித மாறுதலுக்கு நாட்டில் ஒரு எதிர்ப்பு இருக்கிறது. அரசியலும் சமயமும் கலக்கக்கூடாது என்பதே. ஆங்கிலர் வந்தபோது இருந்த நிலைமைக்கு நாம் சென்று விடுகிறோம். இதில் பொதுமக்களுக்கு உரிமை இல்லாமல் போய்விடுகிறது. வேறு சமயங்களுக்கு இவ்வித நிர்பந்தம் ஏற்படுத்தவில்லை. ஆனால் அரசியலில் நிர்வாகம் ஏற்படுத்திவிட்டால் அது செவ்வையாகவே நடக்கும். சிப்பந்திகளுக்கும் உறுதியான வேலை கிடைக்கும். அனால் அருளும் அன்பும்போய் இரும்புச் சட்டமே எங்கும் நிலைபெறும்.

அறநிலையங்களின் வருவாய்களைத் தனிமையான ஒரு நிதியாக ஏற்படுத்தி, சிப்பந்திகளை அரசியல் இலாகாவில் சேர்த்துவிட்டால் இந்த ஆட்சேபனை நீங்கிவிடும். பிறகு சமய நிலையங்கள் தனி ஆட்சி பெறல்கூடும். பொதுமக்களின் கூட்டுறவைக் கோரி ஆலோசனைக் குழுக்களை ஏற்படுத்த வேண்டும். இந்த மாறுதல்கள் அவசியம் வேண்டும் என்று சென்னையில் கூடிய பெரியார்கள் கூட்டம் திருத்தப்பாடு கொண்டு வந்துள்ளது. இத்திருத்தத்தினால் அறநிலையங்களின் நிர்வாகம் சீர்திருத்தம் அடையக்கூடும்.

(இது 'சித்தாந்தம்' என்னும் இதழில் வந்த கட்டுரை)

ஞானசம்பந்தம் ஆண்டுக் கட்டணம் ரூ. 1 — 50

[சந்தாதாரர்களுக்கு]

புதிய சந்தாதாரர்களாகச் சேர்பவர்கள் புதிய சந்தா என்பதோடு தங்களின் முகவரியையும் தெளிவாக மணியார்டர் கூப்பனில் எழுதவேண்டும். பழைய சந்தாதாரர் புதிய ஆண்டுக்குப் பணம் அனுப்பும்போது பழைய சந்தா என்று குறித்தல் வேண்டும்.

ஏதேனும் விவரம் தெரிந்துகொள்ள விரும்புவோர் பதில் எழுதுவதற்குப் போதுமான தபால் பில்லை அனுப்புதல் வேண்டும்.

முகவரி :— செயலாளர், "ஞானசம்பந்தம்" காரியாலயம்,
தருமபுர ஆதீனம், மாயூரம் அஞ்சல், தஞ்சை மாவட்டம்.

வள்ளுவர் வாக்கில் :

செல்வம்

வித்துவான், திரு. ம. சிவசம்பு அவர்கள்
தமிழ்ப் பேராசிரியர், பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

"பணம் பந்தியிலே குணம் குப்பையிலே" என்ற ஒரு பழமொழி உண்டு. குணத்தைவிட பணத்தை மதிக்கும் காலம். பணம் இல்லாதவனை மனைவிகூட மதிக்கமாட்டாள். பெற்ற தாய் அவனைத் திரும்பிக்கூட பார்க்கமாட்டாள். அவன் சொல்லை ஒருவரும் கேட்கமாட்டார்கள். 'ஏழை சொல் அம்பலம் ஏறாது' என்ற அனுபவ மொழி நமக்கு நன்கு தெரியும். படிக்காத வனுயினும் பொருள் இருக்குமானால் அவனை எல்லோரும் போற்றுவார்கள். 'பணம் பத்தும் செய்யும்' என்பதை நாம் அறிவோம். பணத்திற்குப் பலம் அதிகம். ஈட்டி எட்டிய மட்டுந்தான் பாயும். பணம் பாதளம் வரை செல்லும்.

உலக வாழ்க்கை பணம் இல்லாமல் முடியாது என்பதை அறிவோம். 'பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை' என்கிறார் வள்ளுவர். பணத்தின் அருமை அறிந்து விரும்புகிறார்கள் பலர்; பணக்காரன் ஆக வேண்டும் என்று நினைக்கிறார்கள். குதிரைப் பந்தயத்தையும் சூதாட்டத்தையும் நாடிச் செல்லுகிறார்கள். பணத்தின் தன்மை அறிந்தவர்கள் அவ்வாறு செல்வதில்லை. பணம் எங்கிருக்கிறது. எத்தன்மை யது. அதைப்பெறும் வழி யாது. சம்பளம் சேர்ப்பது. நிலைக்கச் செய்யும் வழி என்ன. குறையாதிருக்கச் செய்வது எப்படி பணத்தை பெருக்கும் வழி எது. பணத்தைப் பத்திரமாக வைக்கும் இடம் எது. பணத்தைப் பெற்றவன் செய்யவேண்டிய செயல் என்ன? பணம் படைத்தவன் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதை எல்லாம் நாம் தெரிந்துகொள்ளுவதில்லை. எப்படியாவது பணக்காரன் ஆகவேண்டும் என்றுதான் ஆசைப்படுகிறோம். உண்மையில் அந்த ஆசை இருந்தால் வாருங்கள் என் பின்னால்! நான் சொல்லுகிறபடி நடந்தால் பொருள் தருகிறேன். கொள்ளை அடித்தல்ல, களவினால் அல்ல.

ஏமாற்று வித்தையாலும் அல்ல. நல்ல முறையில் போருள் தருகிறேன் வாருங்கள் என்கிறார் வள்ளுவர்.

பணத்தைத் தேடுவது ஏன்!

வாழ்வுக்குப் பெரியபகை வறுமை. வறுமை அறிவைக் கொல்லும். வறுமையில் கல்வி வளராது. வறுமை நேருபைக் காட்டிலும் கொடியது.

நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்
யா தோன்றும் கண்பாடு அரிது.

இவ்வளவு கொடுமை செய்யும் வறுமையை நாம் ஒழிக்க வேண்டும். சிலர் ஆணவத்தால் நம்மை மதியாது, நம் தகுதியை மதியாது இகழ்ந்து திரிவர். அவரது சேருக்கை அடக்கி அழிக்கவேண்டும். இது மட்டுமா இல்வாழ்க்கையின் முக்கிய பயன் அறம் செய்தல். அறவோர்க் களித்தல்; இவற்றைச் செய்யவேண்டும். இதற்குப் பணம் வேண்டும். இக்கருத்தை :-

அரிதாய அறனெய்தி அருளியோர்க்களித்தலும்
பெரிதாய பகை வென்று பேணுரைத் தேறுதலும்
புரிவமர் காதலற் புணர்ச்சியும் தரும் எனப்
பிரி வெண்ணிப் போருள்வயிற் சென்றநம் காதலர்

என்று தொடங்கும் பாடல் மூலம் பாலைபாடிய கடுங்கோ நமக்கு அறிவிக்கிறார். வள்ளுவர் தன்னுல் இயன்ற முயற்சி செய்து சேர்த்த போருள் எல்லாம் தக்கவர்க்கு உதவி செய்வதற்கே என்கிறார்.

தாளாற்றித் தந்த போருள் எல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு.

இதன் மூலம் இல் வாழ்க்கைக்கு இன்றியமையாதது போருள் என்பதையும், அதை நாம் தேடவேண்டும் என்பதையும் பார்த்தோம். போருளை எங்கு தேடுவது! அது எப்படிப்பட்டது; அதன் தன்மை என்ன என்பதை நாம் அறியவேண்டும்.

பொருளின் தன்மை!

போருள் எங்காவது குவிந்து கிடக்கிறதா? நாம் சென்று அப்படியே அள்ளிக் கோண்டுவந்துவிடுவதற்கு. 'சென்ரோர் முகப்பப் போருளும் கிடவாது' என்கிருர் கடுங்கோ. போருளை நாம் செய்யவேண்டும்? எப்படிச் செய்யவேண்டும். கள்ள நோட்டு அடித்தா? திருடியா? ஏமாற்றியா? அல்ல. முயற்சியால். முயற்சி உள்ளவனிடம் செல்வம் தானே வந்து சேரும் என்கிருர் வள்ளுவர்,

ஆக்கம் அதர்வினுய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையானுழை.

போருள் ஒரு நந்தா விளக்கு. போருள், தன்னைச் செய்தவர்க்கு பகை என்னும் இருளைக் கெடுக்கும். அறத்தையும் இன்பத் தையும் கோடுக்கும். அன்புபேற்ற குழந்தையாகிய அருளை வளர்க்கும் செவிலித்தாய் செல்வம். இவ்வளவு நல்ல பல பண்புகள் உள்ள செல்வத்திடம் ஒரு கேட்ட குணமும் உண்டு. அது ஓரிடத்தில் நிற்காது. சென்றுகோண்டே இருக்கும். அதனுல்தான் அதற்குச் 'செல்வம்' என்று குறித்தார் போலும். அச்செல்வம் வரும்பொழுது கூத்தாடும் இடத்தில் கூட்டம் வந்துசேருதல்போன்று வரும். அது நீங்கும்பொழுது கூத்தாடும் இடத்தில் கூட்டம் முடிந்து கலைவதைப்போல் கலைந்துவிடும்.

கூத்தாட்டு அவைக் குழாத்தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அது விளிந்தற்று.

செல்வம் நிலையற்றது. அது போகவும் வரவும் செய்யும் இயல்பினை யுடையது. இப்படி நிலையற்ற செல்வத்தைப் பெறுவதும், காப்பதும், நிலைக்கச்செய்வதும் உன் கையில் தான் இருக்கிறது; நிலையற்ற செல்வத்தைப் பெற்ருல் பெற்ற அப்பொழுதே நல்ல காரியத்தைச் செய்துவிடு; அறம் செய்து விடு. அச்செல்வம் உன்னிடமே மீண்டும் வரும்.

அற்கா இயல்பிற்றுச் செல்வம் அது பேற்ருல்
அற்குப ஆங்கே செயல்.

(தொடரும்)

திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடு

(மலர் 19, இதழ் 7, பக்கம் 387 இன் தொடர்ச்சி)

11—5—60 ஐந்தாவது திருநாள்

அண்ணுமலைப் பல்கலைக்கழகத் தமிழ் ஆராய்ச்சித் துறைத்தலைவர் வித்துவான், திரு. G. சுப்பிரமணியப் பிள்ளை M. A., B. L., அவர்கள் "சிவஞானபோதம்" என்ற தலைப்பில் ஆற்றிய விரிவுரையின் சுருக்கம்:-

'மலர்தலை உலகின் மாயிருள்' என்று சிறப்புப்பாயிரம் கூறுவதுபோல உலகின் அக இருள் நீங்க எழுந்த நூல் சிவஞானபோதம். பன்னிரண்டு சூத்திரங்களைக் கொண்டது இந்நூல்.

"அவன் அவள் அது எனும் அவை மூவினைமையின்
தோற்றிய திதியே ஒடுங்கி மலத்துளதாம்
அந்தம் ஆதி என்மனார் புலவர்"

என்பது முதலாவது சூத்திரம்.

இருபத்தேட்டு ஆகமங்களின் சாரமாக எழுந்த இந்நூலில் பதி. பசு, பாசம் என்ற முப்பொருள்களின் இலக்கணங்களே பேசப்படுகின்றன.

"ஐம்புல வேடரின யர்ந்தனை வளர்ந்தேனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினி லுணர்த்த விட்
டங்நிய மின்மையி னரன்கழல் செலுமே"

என்ற எட்டாவது நூற்பாமிக உயர்ந்தது. கடவுளின் தத்துவம் முதலியன மிகச் சிறப்பாக விளக்கப்படுகிறது. இந்த நூல் சைவர் சமய தத்துவங்களின் தலைமையான நூலாகும்.

சர்தார் திரு. வேதரத்தினம் பிள்ளை M. L. A., அவர்கள் "அறநெறி வாழ்க்கை' என்ற தலைப்பில் சொற்பொழி வாற்றியதன் சுருக்கம்:-

அறத்தோடு பொருந்திய வாழ்வே சிறந்தது. அந்த அறம் காலம், தேசம் சூழ்நிலை இவைகட்கேற்ப மாறிமாறி நிற்கும்.

ஒருகாலத்திய அறம் - பிறிதோரு காலத்தில் மறமாக ஆனலும் ஆகும். அழுக்காறு, அவா வெகுளி, இன்னுச்சோல் இவைகள் இல்லாத நேறியே அறநேறி. அழுக்காறு என்பதைப் பாவி என உருவாகிக்கிரூர் வள்ளுவர். மேலும் திருச்சேற்றுத் தீயுழி உய்த்து விடும் என்றும் கூறுகிரூர். வெகுளிபற்றிக் கூறும் பொழுது வேகுளியை மிகவும் கோடிது என்று குறிப்பிட்டு வேகுளியில்லேயேனில் எண்ணியதெல்லாம் உடன் கிட்டும் என்று குறிப்பிடுகிரூர்,

" உள்ளிய தெல்லாம் உடனெய்தும் உள்ளத்தால்
உள்ளான் வெகுளி எனின் " —என்பது குறள்.

முகத்தால் இனிது நோக்கி அகத்திலிருந்து இன்சோல் கூறுவதே அறம், முகம் திரிந்து நோக்க மனம் வருந்திச் சேல்லும்விருந்து என்று பலவகையாக அறத்தைக் கூறு கின்ரூர்கள்.

வித்துவான், ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் " மேய்கண்டதேவர் " என்ற தலேப்பில் பேசியதன் சுருக்கம் :-

சைவ சமயத்திற்குச் மிகச் சிறந்த நூலே எழுதியருளியவர் ஸ்ரீ மேய்கண்டதேவர். அவர் நடுநாட்டில், வேளாண்குலத்தில் அச்சுதகளப்பாளர் என்பவருக்குத் திருமகனுய் அவதாரம் செய்தார்.

பிதுர்க்கடன் கழிக்கப் பிள்ளே இல்லேயே என்று அச்சுத களப்பாளர் நெடுநாள் தவமிருந்தார். திருமுறையில் கயிறு சார்த்திப் பார்த்தார். திருவெண்காட்டுப் பதிகமான 'பேயடை யா' என்னும் பதிகம் வந்தது. மிக்க மகிழ்ச்சி அடைந்தார். அதன்படி பிள்ளேப்பேற்றை விரும்பி இறையருள் நாடி நின்றனர். அவர்கள் தவத்தின் பயனுக மேய்கண்டார் பிறந்தார். இரண்டு வயதிலேயே திருஞானசம்பந்தர் போல மேய்யுணர்வு கைவரப் பேற்ரூர்.

" ஒருமைக் கண் தான் கற்றகல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து "

என்ற வள்ளுவர் வாக்குப்படி விளங்கினர். பின்னர் சைவ சமயத்தின் உண்மைப்பொருளே விளக்குவதில் சிறந்த நூலாகிய சிவஞானபோதத்தை அருளினர்.

12—5—60 ஆருவது திருநாள்

வித்துவான், திரு. T. முத்து. கண்ணப்பர் B.A., M.L.C. அவர்கள் "அருணந்தி சிவனுர்" என்ற தலைப்பில் பேசிய தன் சுருக்கம் :-

மேய்கண்ட சந்தானத்தில் தோன்றியவர் அருணந்திசிவனுர். சகலாகம பண்டிதர் என்ற சிறப்புப் பேயருடையவர். அச்சுத களப்பாளர் - மங்களாம்பிகை என்ற பேரியவர்களுக்குக் குல குருவாக விளங்கியவர். அவர்கள் மக்கட்பேறின்றி வருந்த அருணந்தி சிவம் திருமுறையில் கயிறு சார்த்திப் பார்க்கச் சொன்னுர். அதன்படி செய்ய 'பேயடையா' என்ற திருவேண் காட்டுப் பதிகம் வர அவ்வாறே சென்று முக்குள நீராடி மகிழ்ந் தனர். பின் மகவு பிறந்தது. அவர்தான் மேய்கண்டார். சிறந்த சாத்திரங்களைக் கற்றுச் சீடர் பலருடன் இருந்தார். அருணந்திசிவம் தன் சீடர்களை விட்டு அவரை அழைப்பிக்க - போன சீடர்கள் திரும்பவில்லை. பின் தானே சென்று ஆணவத் தின் சொருபம் யாது! என்று கேட்க, மேய்கண்டார் அவரையே சுட்டுகிருர். பின்பு தன்னை உணர்ந்து பணிகிருர். சிவஞான சித்தியார். 'இருபா இருபஃது' முதலிய நூல்களை எழுதிச் சைவப் பணி செய்தார்.

தருமை ஆதீனப் பல்கலைக் கல்லூரிப் பிரின்சிபால், முதுபேரும்புலவர், திரு. முத்து. சு. மாணிக்கவாசகனுர் அவர்கள் "சிவஞான சித்தியார்" என்ற தலைப்பில் சொற் போழிவாற்றியதன் சுருக்கம் :-

சிவஞான போதத்தின் செய்யுள் வடிவான உரையென விளங்கும் சிவஞான சித்தியாரை அருணந்திதேவர் இயற்றி யருளினுர். கலாந்தம், நாதாந்தம், போதாந்தம், யோகாந்தம், வேதாந்தம், சித்தாந்தம் என்ற ஆறு அந்தங்களுள் சித்தாந் தத்தை அறிவிப்பது சிவஞான சித்தியார்.

"அந்தம் ஓராறும் அறிவார் அதிசுத்தர்"

என்றருளினுர் திருமூலர்.

" வள்ளுவர்சீர் அன்பர்மொழி வாசகம் தோல் காப்பியமே
தேள்ளுபரி மேலழகர் செய்தஉரை - ஒள்ளியசீர்த்
தோண்டர் புராணம் தொகுசித்தி ஓராறும்
தண்டமிழின் மேலாந்தரம் "

என்ற தனிப்பாடல் ஒன்று தமிழில் உள்ள நூல்களுள் மேலாந் தரத்தை யுடையன இவை என்று ஆறு நூல்களைக் குறித்து அவற்றுள் சித்தியாரை முடிந்த முடிபாகக்கொண்டுளது.

சிவஞானசித்தி சிவஞானுர்த்தங்களுக்கெல்லாம் உரையாணி என்ருர் சிவஞான முனிவர். முப்போருளின் உண்மையைத் தர்க்க ரீதியில் விளக்குவது இந்தூல். இதனை நன்குணர்தால் முதநூலையும் வழிநூலையும் இனிது கற்றறியலாம்.

தருமை ஆதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர், செஞ்சோற்கோண்டல், வித்துவான், திரு. சோ, சிங்கார வேலனுர் அவர்கள் 'ஆசிரியர் அளிக்கும் விடை' என்ற தலைப்பில் பேசியதின் சுருக்கம் :-

சாத்திர நூல்களும், தோத்திர நூல்களும், சைவசமயப் போக்கிஷங்களாகும். ஆண்டவனது தன்மை, அவனை அடையும்வழி, ஆன்மாவின் இலக்கணம் ஆகியவற்றை அறிய இந்த நூல்கள் துணை செய்கின்றன. தோத்திர வடிவமாகவும் சாத்திர வடிவமாகவும் இறைவன் இருக்கிருன் என்று கூறுகிருர் அப்பர்.

மெய்கண்ட சாத்திரத்தில் உள்ள 'இருபா இருபஃது' என்ற நூலில் ஆசிரியரின் வினு, விடையைக் காணலாம். மெய்கண்டாரின் சீடராகிய அருணந்தி தேவரால் இயற்றப் பேற்றது இந்நூல். இரண்டு வகைப் பாக்களாலாகிய இருபது பாடல்களைக்கொண்டது. சுத்தன், அமலன், சோதிநாயகன் என்ற பல பேயர்களால் ஆண்டவனைக் குறிப்பிடுகிறது இந்நூல்.

13—5—60 ஏழாவது திருநாள்

திருமதி. T. N' அனந்தநாயகி B. A., B, L., M. L. A. அவர்கள் தென்னுட்டில் அறநிலையங்கள் என்ற தலைப்பில் ஆற்றிய விரிவுரையின் சுருக்கம் :-

அமைதி நிறைந்த வாழ்வில்தான் ஆண்டவன் சிந்தனை அதிகம். தென்னாட்டில் பண்டு போதிய அமைதி இருந்ததால் தான் இத்தனை அறநிலையங்கள் எழுந்தன. சைவ சமயம் மிகப் பழமையானது என்பதற்கு மோஹஞ்சதாரோ நகரமே சான்று ஆகும். இயற்கையை மனிதன் அன்புடனும் அச்சத் துடனும் வழிபட்டான். பின்னர் அதற்கோரு சின்னம் வைத்து முதலில் மரத்தின் அடியில் வழிபட்டார்கள்.

பல்லவர்கள் காலம் தான் கற்கோயில் எழுந்த காலம். பின்னர் சோழர்கள் தஞ்சை, கங்கைகொண்டசோழபுரம் ஆகிய ஊர்களில் கலைக் கோயில்களை எடுத்தார்கள். சேம்பியன் மாதேவியார்க்குப் பின்னர் மங்கையர்க்கரசியார் போன்ற பெண்கள் சமய வளர்ச்சியில் மிக்க பங்கு கொண்டனர்.

அரசர்கள் ஆக்கமுடன் கட்டிய கலைக் கோயில்களை இன்று கண்காணிக்கக்கூட முடியவில்லை நம்மால். கலைகள் வளர, சமயம் வளர. நாகரீகம் அழியாது நிற்க வேண்டுமானால் கலைப்பேட்டகமான அறநிலையங்களைப் பாதுகாத்தல் நமது நிலையாய கடமை என எண்ணவேண்டும். சமயநெறி பாழா காமல் பார்த்துக்கொள்ளவேண்டும். 'சமய நெறியைப் போதிக்கும் சக்தி தென்னாட்டுக்கே உண்டு' என்றார் விவேகானந்தர். தென்னாட்டின் அறநிலையங்களை அழிவுக்கு உட்படுத்தாமல் ஆவன செய்யவேண்டும். அதற்கான சக்தியை ஆண்டவன் அருளட்டும்.

வித்துவான். ஸ்ரீமத். முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் 'மறைஞானசம்பந்தர் மாண்பு' என்ற தலைப்பில் பேசியதன் சுருக்கம் :-

உமாபதி சிவனார் தில்லைப் பெருமான் திருமேனி தீண்டும் பேறுபெற்ற குலத்தவர். ஒருநாள் பூசைமுடித்து சிவிகையில் தீவட்டி பின் வரச்செல்கிறார். திண்ணையில் வீற்றிருந்த மறை ஞானசம்பந்தர் பட்டகட்டையிலே பகற்குருடு ஏகுதுபாரீர்! என்றார் சீடர்களிடம். ஆணவம் அழிந்த உமாபதி சிவம் மறைஞானசம்பந்தரை வணங்கி சீடரானார். ஆசிரியன் உண்ட மிச்சிலை உண்ணும் அளவுக்குப் பக்குவம் பெற்றார். பராசர முனிவர் பரம்பரையில் 'பெண்ணாகடத்தில்' மறைஞான சம்பந்தர் அவதரித்தார். இதை

திருவளருஞ் சாமமறை திகழ்பரா சரன்மரபோன்
விரசுநர்பான் மறையுணர்வு விரிந்தோளிரப் புணர்த்துவோன்
மருமமோடு கடந்தையை யாள் மறைஞான சம்பந்த
குருவணிதன் மருமலர்த்தாள் குறித்துருகிப் பரசிடுவாம்.

என்ற மெய்கண்ட சாத்திரநூலில் உள்ள பாடலினுல் அறியலாம்: சிறந்த மறைகளைத் தேரிந்தவர். சைவம் வளரப் பணி செய்த பெரியவர் இவர்.

தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி பேராசிரியர், வித்துவான். திரு. ம. சிவசம்பு அவர்கள் 'அருட்செல்வம் வேண்டுமா' என்ற தலைப்பில் பேசியதன் சுருக்கம்:-

செவிச் செல்வந்தான் செல்வத்துள் தலையாயது என்கின்றனர். ஆனுல் குமரகுருபரர் 'செல்வம் என்பது சிந்தையின் நிறைவு' என்கிருர். அன்பு என்ற குழவி அருள்.

'அருளும் அன்பும் நீக்கிப்போருள் வயின் பிரிந்தவர்'

உறரோர் அல்லர் என்கின்ற குறுந்தோகைப் பாடல் மூலம் அருளும் அன்பும் நீங்கிப்பிரிபவர் அறிவுடையோர் ஆகமாட்டார்கள். பொருளை இழந்தால் பெறலாம். ஆனுல் அருளை இழந்தால் மீண்டும் பெறமுடியாது அதை வள்ளுவர் வாக்கால் அறியலாம்

பொருளற்றர் பூப்பர் ஒருகால் அருளற்றர்
அற்றர் மற்றதல் அரிது.

பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லையாதல் போல அருளிலார்க்கு அவ்வுலகம் இல்லை என்பதும் பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் பண்பே அருளின் அடிப்படை என்பதும் தெளிவு.

பொருளுடையான் கண்ணதே போகம் அறமும்
அருளுடையான் கண்ணதே ஆகும்.

என்றும் அருளிலான் செய்யும் அறம் தெருளாதான் மெய்ப் பொருளைக் கண்டதுபோல என்கிருர் வள்ளுவர். அருள் வாழ்வின் முக்கிய அங்கமாகும். அது வள்ளுவர் கூறிய செல்வங்கள் பலவற்றுள் ஒன்று என்பதுவும் அது வாழ்க்கைக்கு மிக இன்றியமையாததாகும் என்பதும் வெளிப்படை. (தொடரும்)

மெய்ஞ்ஞானச் செல்வர்கள்

திரு. சு. அ. இராமசாமிப்புலவர் அவர்கள்

கருப்பக்கிளர், தஞ்சை மாவட்டம்

ஈ சிவசங்கர தேவர்

இப் பேரியார் தோன்றிய இடம் காலம் முதலியன விளக்க மாகவில்லை. திருப்போரூர்ச் சிதம்பர அடிகள் ஆதீனத்தில் இரண்டாவது ஆசிரியராக எழுந்தருளியிருந்தார். அறிவு நூல்களை மிகுதியாகக் கற்றுணர்ந்த இவர் தெய்வத் திருவருளை யும் நன்கு பேற்ற மெய்ஞ்ஞானச் செல்வராக விளங்கினர்.

மக்கட்பேற்றை விரும்பிவந்த திருமயிலை பூம்பாவை வேலப்ப முதலியார்க்கு "ஆறுமுகந் துணைசெய்யும்" என்று திருநீறு வழங்கினர். அதனால் அவர்க்கு நன்மகப்பேறு வாய்த்தது. மற்றும் பல அன்பர்களின் அவாவை நிறைவேற்றி யருளினர். அருளரசு செலுத்திய இவர் உயிர்கள் மாட்டுப் பேரருள் மிக்காராக விளங்கினர். திருப்போரூர் இவருடைய அருளாட்சிக்குள் அமைந்துநின்றது. அவ்வூர் எல்லைக்குள் உயிர்க் கொலைகள் நடவாவண்ணம் பார்த்துக்கொண்டார். ஊர் எல்லைக்குள் சிறு தெய்வங்கட்கு உயிர்ப்பலியிடுதலுந் தடை செய்யப்பெற்றிருந்தது.

போரூர்க்கு அண்மையில் உள்ள கோவனம் என்னும் ஊரில் அந்நாளில் நவாபு ஒருவன் இருந்தான். அவனுடைய மருகன் திருப்போரூர் எல்லைக்குள் ஒரு சோலையில் வந்து தங்கியிருந்தான். அவன் அவ்விடத்தில் ஓர் ஆட்டை யறுத்துச் சமைத்துண்பதற்கு முயன்றான். செய்தியறிந்த இப் பேரியார் அவ்வாறு செய்யாவண்ணந் தடுத்தார். நவாபு மருகன் நவாபி னிடத்தில் சென்று முறையிட்டுக்கொண்டான்.

நவாபு திருப்போரூரின் பெருமையையும், அடிகளாரின் அருட் சிறப்பையும் அறிந்தவனல்லன். அவன் மிகுந்த சினங் கொண்டான். அடிகளாரைப் பிடித்துக்கொண்டு வரும்படி தன்னுடைய வீரர்களை அனுப்பினன். வீரர்கள் சமயம் பார்த்து அடிகளாரைப் பற்றிக்கொண்டுபோய் நவாபிடம் விட்டனர்.

அவன் அடிகளாரைச் சிறைப்படுத்தினன். அச்சிறை ஒரு மேன்மாளிகையில் அமைந்திருந்தது.

திருப்போரூர் அன்பர்கள் அருளாட்சியின் பயனால் அடிகளார்க்கு நேர்ந்த அல்லலை அறிந்தனர். அந்தோ இவ்வாறு நேர்ந்ததே என்று உள்ளங்கவன்றனர். ஆயினும் அறுமுகப் பரமன் அருள்செய்வான் என்று உள்ளந்தேறினர். அறிவாளிகள் சிலர் அடிகளார் அத் தீயோன் கையில் அகப்பட்டு அல்லலுறுவதைப் பார்க்கினும் அறுமுகன் அடியை அடைந்து விடுதல் நல்லதென்று எண்ணினர். அவ்வெண்ணத்தை ஒரு சூழ்ச்சி வாயிலாக அடிகளார்க்கு அறிவித்தனர்.

அடிகளார் சமயம் பார்த்திருந்து ஒரு நாள் நள்ளிரவில் மேன்மாளிகையிலிருந்து மக்கள் நடமாட்டம் இல்லாத ஒரு பக்கத்தில் குதித்தனர். அவ்வாறு குதித்த இடம் முட்புதராக இருந்தது. அடிகளாருடைய உடலிற் பல முட்கள் குத்தின. அதிகத் துன்பம் உண்டாயிற்று. ஆயினும் முருகன் திருவருளால் உயிர் போகவில்லை. அவ்விடத்தை விட்டேழுந்த அடிகளார் திருப்போரூருக்குச் சென்றால் இத் தீயோன் மேலும் அங்கு வந்து பிடித்துக்கொணர்ந்து தீமை செய்வான் என்று எண்ணியவராய் "ஆறுமுகம் துணைசெய்யும். ஆறுமுகம் துணைசெய்யும்" என்று இயம்பிக்கொண்டு உணவு முதலியன இல்லாமல் மேற்குத் திக்கை நோக்கிச் சென்றனர். ஆறுகள், மலைகள், காடுகள் முதலியவற்றைக் கடந்து ஆறுகாடு என்னும் ஊரை யடைந்தார். உடலில் இருந்த முட்களை எல்லாம் ஒவ்வொன்றாகப் பறித்தெறிந்தார். பாலியாற்றில் மூழ்கிச் சிவபூசையை முடித்துக்கொண்டு அவ்வாற்றின் கரையில் இருந்த ஒரு மரநிழலில் தங்கியிருந்தார்.

திருப்போரூர் முருகக்கடவுள் சிவசங்கரதேவரைப்போல் திருவுருக்கொண்டு கோவனம் நவாபு மனைவி உறங்கிக்கொண்டிருக்கும்பொழுது அவளுடைய கனவில் சிறைப்புறத்தில் இருந்து வந்தாற்போலத்தோன்றி வயிற்றிலே வேற்படையினால் குத்திவிட்டு மறைந்தருளினார். அப்பொழுதே அவளுக்கு கடுமையான வயிற்றுவலி யுண்டாகியது. அவள் திடுக்கிட்டு விழித்தாள். நோயினுடைய கொடுமையைப் பொறுக்கமுடியாமல் கோவென்றலறிக் கூச்சலிட்டாள்.

நவாபு முதலியோர் விரைந்தோடிவந்து பார்த்தார்கள். நவாபு தன்னுடைய மனைவியைப்பார்த்து, " ஏன் அழுகின்றனை? நேர்ந்தது என்ன? ஏதேனும் அஞ்சத்தக்க கனவினைக் கண்டு விட்டாயோ?" என்று உசாவினன். அதற்கு அவள் " நீர் சிறையிற் காவற்படுத்திருந்த காவிவேட்டித் துறவி என்னுடைய கனவிலே வந்து வயிற்றில் வேலாயுதத்தினால் குத்தினாற் போற் கனவு கண்டேன். விழித்துக்கொண்டு பார்த்தால் அது வயிற்றுவலியாக மாறி என்னை மிகுந்த துன்பப்படுத்துகிறது. அவ்வலியை என்னாற் போறுக்கமுடியவில்லை" என்று கூறி விட்டு மேலும் அலறத்தோடங்கினள்.

நவாபு தன் மனைவியைப் பார்த்து, " நீ அந்தத் துறவியை எனக்குக் காட்டுவாயா?" என்று கேட்டான். அதற்கு அவள் " சிறையில் இருந்த காவிவேட்டித் துறவிதான் என்னைக் குத்தியது அதற்குச் சிறிதும் ஐயமில்லை" என்று கூறினள். நவாபு தன்னுடைய ஏவலாளர்களைப் பார்த்துச், " சிறையில் உள்ள காவிவேட்டித் துறவியை என்முன் அழைத்துக்கொண்டு வாருங்கள்" என்று கட்டளையிட்டான். ஏவலாளர்களோ பல விடங்களிலும் தேடிப்பார்த்துவிட்டு " அவரை எங்கும் காணேம். அவர் மாயமாக மறைந்துவிட்டார்" என்று கூறினர்கள்.

நவாபு வியப்புந் திகைப்புங்கொண்டான். அவனுடைய உள்ளத்தில் அச்சமுங் குடிகொண்டது. ஊரில் உள்ள மருத்துவர்கள், மந்திரக்காரர்கள், பக்கிரிகள் முதலானோரை வரவழைத்து மருத்துவஞ்செய்யக் கட்டளையிட்டான். மருத்துவர் கள் வயிற்றுவலி நீங்குவதற்கான மருந்தைக் கொடுத்துப் பார்த்தார்கள். மந்திரக்காரர்கள் பேய் பூதங்களை விரட்டுவதற் கான மந்திரங்களை ஓதிப்பார்த்தார்கள். எத்தகைய பயனுங் கிட்டவில்லை. நோய் மேன்மேலும் பெருகிக்கொண்டு சென்றது.

மந்திரக்காரர்களும், மருத்துவர்களும் நவாபைப் பார்த்து, " இது நோய் வகையைச் சேர்ந்ததன்று; பில்லி சூனியம் முதலியவைகளும் அல்ல. தெய்வக் குற்றத்தினால் நேரிட்ட தாகத் தெரிகிறது. எங்களாற் செய்யக்கூடியது ஒன்றுமில்லை" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்கள்.

நவாபு தன்னுடைய மனைவியைப் பார்த்து, "அந்தக் காவிவேட்டித் துறவியை எனக்குக் காட்டுவாயா?" என்று கேட்டான். அதற்கவள், "இவ்வூரில் உள்ள காவிவேட்டித் துறவிகளையெல்லாம் இங்குவரச்செய்தால் என்னைக் குத்தியவரைக் காட்டுகிறேன்" என்றாள். நவாபு தன்னுடைய ஏவலரை அனுப்பி அவ்வூரில் இருந்த காவிவேட்டித் துறவிகள் அனைவரையும் அரண்மனைக்கு அழைத்துவரக் கட்டளையிட்டான். அவர்களும் அவ்வாறே அரண்மனைக்கு அழைக்கப்பட்டனர். நவாபு மனைவி அவர்களனைவரையும் பார்த்துவிட்டு "என்னைக் குத்தியவர் இக்கூட்டத்தில் இல்லையென்று கூறினாள். மேலும் பலவிடங்களில் ஏவலாட்கள் தேடித் துறவிகளையெல்லாம் கொண்டுபோய்க் காட்டியதன்றிச் சிவசங்கர தேவரையும் அழைத்துக்கொண்டு சென்றார்கள். சிவசங்கரதேவரைப் பார்த்த நவாபு மனைவி "என்னைக் குத்தியவர் இவராகத்தான் இருக்க வேண்டும்" என்று கூறினாள்.

அவள் கூறியதைக் கேட்ட நவாபு இத்துறவி நமது கட்டுக் காவல்களையெல்லாங்கடந்து உள்ளே வந்து வேலாற் குத்தினர் என்பது சிறிதும் நம்பக்கூடாததாகும். இஃது ஏதோ தெய்வத் தன்மையால் நிகழ்ந்திருப்பதாகத் தெரிகிறது. நாம் இத் துறவியின்மீது குற்றஞ்சுமத்திப் பழிக்கு ஆளாகிவிடக்கூடாது என்று எண்ணினான். அடிகளாரைப் பார்த்துப் "பெரியீர்! என்னுடைய மனைவி தாங்கள் கனவில்வந்து வேலாற் குத்தியதைப்போல் கனவு கண்டு வயிற்றுவலியினால் பொறுக்க முடியாத துன்பப்படுகிறாள். இஃது எக்காரணத்தால் நேர்ந்தது என்பதைத் தாங்கள் அன்புகூர்ந்து தெரிவித்தருளவேண்டும்" என்று சொல்லி வேண்டிக்கொண்டான். (தொடரும்)

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam
Velur Sri Vaithianathaswami Devasthanam
Vaithiswarankoil

We had a delightful dharsan of the presiding deities this night, though we were a bit late. Our thanks are due to the Kattalai Vicharanai for his unique kindness.

Sd. Chandrasekaran, 23—2—60
Collector of Tanjore.

கடிதம் 14

புதுமைக்கு...

சேஞ்சோற்கோண்டல்
வித்துவான். திரு. சொ. சிங்காரவேலனார் B. A.,
தமிழ்ப் பேராசிரியர். தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி.

முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப்பழம் பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே.

— திருவாசகம்.

அன்புள்ள புதுமை,

வாழ்த்துக்கள். நீண்ட நாட்கள் ஆகிவிட்டன உனக்கு நான் கடிதம் எழுதி. இருப்பினும் உன்னிடம் அன்பு குன்ரு உள்ளத்தோடுதான் இதனை எழுதத் தோடங்குகின்றேன். கடிதம் எழுதாமலிருப்பதால் நம் அன்பிலே குறை உண்டு போலும் என்று யாரேனும் எண்ணிவிட்டால் அவர்கள் நினைப்பில்தான் குறை. 'புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான் நட்பாம் கிழமை தரும்' என்பது வள்ளுவம் அன்ரே? உணர்ச்சி ஒத்த இருவர் நட்பில் பழகித்தானுக வேண்டுமென்ற விதிஇல்லை. பழகினும் பழகாவிட்டாலும் பழைய அன்பிலே குறைவிருக்காது என்பது போதுவான உண்மை.

நண்பர் மறுமலர்ச்சியும், நண்பர் புரட்சியும் அடிக்கடி உன்னிடம் மீண்டும் பலமுறை வருவதாகவும் அவர்களோடு நீ சிற்சில பொருள்கள் பற்றி உரையாடி வருவதாகவும் கேள்விப்பட்டேன். உண்மைதானே? மறுமலர்ச்சி நீண்ட நாட்களாக என்னை நன்கு அறிந்தவரே. நல்ல மனிதர். பழகுதற்கு மிகவும் இனியவர். ஒரு கொள்கையை அடிப் படையாக வைத்து அதில் வாழ்ந்து வருபவர். புரட்சி இருக் கிருரே அவரைப்பற்றித்தான் எனக்குக் கொஞ்சம் கவலை. அவர் எண்ணுது துணியும் இளைஞர். திடீர் திடீரென்று உணர்ச்சி வசப்பட்டுக் கூத்தாடி வேறியாளராக மாறிவிடுவார். அவரிடத்தில் நீ பழகும்போது சிறிது எச்சரிக்கையோடு தான் பழகவேண்டும்; வாள் முனையோடு பழகுவதுபோல மிக்க விழிப்பாகவே இருத்தல்வேண்டும்.

இன்னுமோரு வார்த்தை. உணர்ச்சி வசப்பட்டு எதையும் ஆராயாமல் செய்வதோடு இன்னும் சில கேட்ட செயல்களையும் அவரிடத்தில் காண்பதுண்டு. தேவையற்ற செயல்களுக் கேல்லாம் அவர் தீர்மானங்கள் போட்டுத் திருநடம் புரியத் தோடங்கிவிடுவார். அண்மையில் அவர் அறவழியினின்று திரும்பி ஒரு போராட்டம் நடத்தினர். அது தோல்வியில்தான் முடிந்தது என்பதும் அனைவரும் அறிந்ததே. அன்பினால் செய்து முடிக்கக்கூடிய செயல்கள் அனைத்தையும் அவர் சுருதிப் பேருக்கால் செயற்படுத்திவிடலாம் என்று பகற்கனவு கண்டவர். குண்டுகளாலும் துப்பாக்கியாலும் திருத்தமுடியாத உள்ளங்களை நவகாளியில் காந்தி யண்ணல் திருத்தவில்லையா? இன்றும், அடங்காத கொள்ளையர் கூட்டத்தை அன்பின் ஆற்றலால் அண்ணல் விநோபா மாற்றிக்கொண்டுவரவில்லையா? இவற்றைக் கண்ட இருபதாம் நூற்றாண்டின் தலைமுறையிலா போராட்டம் தேவை? இந்தியப் பேருநிலத்தின் உரிமைப் பேறே இந்த அறவழியிற் கிடைத்ததுதானே? எனவேதான் கண்பர் புரட்சியின் மாறுபட்ட நடவடிக்கைகளில் நான் முரண்பாட்டைக் காண்கிறேன். இதனை நான் நெருங்கிய உறவு முறை பற்றிக் கூறுகிறேன். ஒரு வேளை உனக்கெழுதிய இக் கடிதத்தையும் அவர் பார்க்கக்கூடும். ஆயினும் உண்மையை உள்ளபடி எழுதும் எனக்கு அதைக் குறித்துச் சிறிதும் அச்சம் இல்லை என்பதையும் உறுதியாக உரைப்பேன்.

இலக்கியப் பயிற்சியும், ஏனைய கலைப் பயிற்சிகளும் ஆகிய துறைகளில் தமிழ் நாட்டுக் கலைக்கல்லூரிகளில் ஒரு புதிய செயன் முறையை நீ தோடங்கியிருக்கிறாய். எனக்குப் பேருமிதமும் மகிழ்ச்சியும் மிகுகின்றன. பி. ஏ., முதலிய வகுப்புக்களில் எல்லாம் பிறகலைகளைச் செந்தமிழிலேயே பயிற்றுவது என்ற முறை வரவேற்கத்தக்கது. தமிழகத்துக் கல்வி முறையில் ஆங்கிலம் அனைத்துத் துறைகளிலும் ஆட்சி செலுத்துவதைப் படிப்படியாகக் குறைத்துக்கொண்டே வந்தாலல்லாது "வெளிநாட்டுப் போருள்களுக்கே மரியாதை புரியும் விவேகம்" நம்மை விட்டுக் கொஞ்சம் கொஞ்சமாக வருவது நழுவ வழியில்லை. "மெல்லத் தமிழ் இனிச்சாகும்" என்று ஒரு பேதை உரைத்ததாகப் பாரதி பாடினாரே, அது போன்ற பேதைப் பேச்சுக்களுக்கு இது ஒரு சவால் என்றே

நான் கருதுவேன். 'அவசரப்பட்டுச் செய்துவிட்டார்கள்' என்று ஆராயாமற் கூறுவோர்க்கு வரம்பூட்டுப் போட வேண்டுமாயின் வித்தகர்கள் விரைந்து நூல்களை வெளியிட்டு உதவுதல் வேண்டும். தமிழில் உலகக் கலைகளைப் பயிற்றுதற்கு மலைத்து நின்று மயங்குமளவுக்குப் பேருவாரியாக அந்நூல்கள் வெளிவரல் வேண்டும். தமிழில் இக்கலைகளைப் பயில முன் வரும் மாணவர் அளவும் பெருகவேண்டும். 'பொருளுதவி' செய்து மாணவர்களைத் தமிழ்க்கலைப் படிப்புக்கு வரவேற்கு மளவுக்கு நாமிருப்பது நமக்கே நகைப்பூட்டும் செயல் என் பதை நான் உறுதியாய்க் கூறுவேன்.

புதுமை! தமிழகத்தைப் போறுத்தவரைக்கும் நீ செய் திருக்கும் இச் சீரிய செயலை ஏனைய மொழி மாநிலங்களும் பின்பற்றுதல்வேண்டும் என்பதே என் விருப்பம்.

ஒரு குறை என்னுள்ளத்தைப் பெரிதும் வாட்டுகிறது. பிறநாட்டுச் செய்திகளை நம் மாநிலத்துப் பரப்புதற்கெனத் தொடங்கி நடத்தப்பெறும் திங்களிதழ்கள் (சோவியத் நாடு, அமெரிக்கன் ரிப்போர்ட்டர், சைனீஸ் போன்றவை) அனைத் திலும் நல்லதமிழ்கற்றோர் எழுத்தாளராயமர்ந்து இனிய எளிய தமிழில் எழுதவேண்டும். பிறமொழிச் சொற்களைக் கலந்து கலந்துதான் எழுதி இன்றுள்ள அவல நிலைக்கு வந்துள்ள நாம், இனியும் அந்தக் குறையைத் தொடர்ந்து தெரிந்தே செய்து குலைக்க வேண்டுமா என்ன? தமிழகத்து நாளிதழ்களில் வார இதழ்களில் குறிப்பிட்ட சிலவற்றைத் தவிர ஏனைய பெரும்பாலன இக்குறை உடையவையே என்பதை எண்ணி வருந்துகிறேன்.

தம்பி! இவற்றைத் திருத்தும் திருப்பணியில் நீ ஈடு படுவாய் என்று நம்பியே இதனை நான் உனக்கு எழுதுகிறேன். புறத்தே தம் வாழ்வைத் தமிழால் இயக்கிக்கொண்டே, அகத்தே அதன்பால் மெய்யான பற்றில்லாதவரைப்பற்றி என்ன கூறு வது? புதுமை! பொறுப்புணர்ந்த பிள்ளையான நீ இந்த மன மாற்றத்துக்கு ஏதாவது மருந்து கண்டுபிடி; முயற்சி செய்; அப்போதுதான் 'தமிழ் கூறு நல் உலகு' வளரும். இவை பற்றிய உன் கருத்துக்களை உடன் எழுது.

உனது,
பழமை.

வள்ளுவன் வழி

திரு. T. S. புருஷோத்தமன் அவர்கள், பெங்களூர்

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' 'தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை' என்று அன்று கூறினுள் ஔவைப் பிராட்டி. சங்க காலத்தில் போங்கித் ததும்பிய இக் கருத்து - சேந்தமிழ் நாட்டில் தோன்றிய இச்சேழுமிய கருத்து உலகோர் அனைவராலும் புகழப்படுகிறது. இந்தியரை ஒருசிலர் தூற்றினுலும் நம் கொள்கைகளை நேற்றும், இன்றும் இவ் வையகம் போற்றுகிறது எனில் அது புனைந்துரையன்று; புகழுரையும் அன்று. அருள் பூத்துக்குலுங்கும் திருக்குறளைக் கண்டான். கண்டகணமே களிப்புக்கொண்டு போருள் புகலிடம் கொண்ட ஔவையின் முதுமொழியைக் கேட்டான். உடனே அக்கோள்கைகள் தினைக்கும் பாட்டு ஒன்று தீட்டினுன் ஆங்கில நாட்டான். 'Mother is a Mother still, the Holiest thing alive' (தாய் என்பது உலகில் உயிருடன் காணும் ஜீவராசி களில் புனிதமானது) 'God could not be everywhere and so he made Mother a living God' (கடவுள் எல்லாப் போருள்களிலும் எக்காலத்திலும் இருக்கமுடியாது என்ற காரணத்தால் அப்போருள்களின் அன்னைக்குத் தன் அருளை அளித்து நடமாடும் தெய்வமாகச் செய்துள்ளார்). வள்ளுவரால் வரையப்பட்டதும் திருக்குறளுக்குச் சிகரம்போன்றும் அஸ்தி வாரம்போன்றும் காணப்படும் சோல்லிற்கு உறுதிபயக்கும் குறளை ஆராய்ச்சிக் கண்களுடன் காணலாம்.

'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு'

இதன் கருத்தாவது :- எல்லா எழுத்துக்களும் அகரத்தை முதலாகக் கோண்டிருப்பதுபோன்று, இவ்வுலகம் ஆதியும் அந்தமுமில்லா அரும்பெரும் சோதியை, ஆதிபகவனை முதலாகக் கோண்டுள்ளது என்பது अक्षराणामकारोऽस्मि (நானே அகரமாக இருக்கின்றேன்) என்றும் अहं सर्वस्य प्रभवो मत्तः सर्वं प्रवर्तते (நான் எல்லாவற்றிற்கும் வித்து. என்னிடமிருந்தே இவ்வண்ட சராசரங்களும் உண்டாயின) என்று வேண்ணேய் உண்ட வாயன் கண்ணன் 'கீதையில்' குறிப்பிட்டுள்ளதையும்,

'ஓசை ஒலியேலாம் ஆனுய் நீயே' என்று நாவுக்கரசர் நயம்பட உரைப்பதும், 'லா இலாஹீ இல்லல்லாஹீ முகம்மது ரசூலல் லாஹீ' என்று மகம்மதிய மறை 'தீன்' கூறுவதும், 'தீயினுள் தெறல் நீ, பூவினுள் நாற்றம் நீ, கல்லினுள் மணியும் நீ சோல்லினுள் வாய்மை நீ' என்ற பரிபாடற் பகுதியையும் ஆராய்ச்சிக் கண்களுடன் கண்டால் அவை அனைத்தும் முன்பு குறிப்பிட்டுள்ள குறளின் விளக்கம் என்று அறியலாம்.

'சாணினு முளனேர் தன்மை அணுவினைச் சத கூறிட்ட
கோணினும் உளன்மா மேருக் குன்றினும் உள(ன்) இந்நின்ற
தூணினும் உள(ன்) நீ சோன்ன சோல்லினும் உளன்'

என்று கல்வியாலும், கவிதையாலும் பேரிய கம்பர் கூறுவது கற்பவரின் அறிவிற்கு அமுதூட்டிக் களிக்கச்செய்கிறதல்லவா?

'ஆதிபகவன் முதற்றே உலகு' என்னும் அடிக்குத் தாயும் தந்தையும் உலகின் முதற்போருள், முழுப்போருள் என்று விளக்கம் கூறினுல் மிகையாகாது. வள்ளுவரின் தாய் 'ஆதி' தந்தை 'பகவன்' இவர்கள் இப்பேயருடன் இம் மண்ணில் தோன்றிய புண்ணியப் பிறவிகள். இக் காரணத்தால் வள்ளுவரும் அவர் தாய் தந்தையரை ஆண்டவனுக்குச்சமமாகக் கோண்டு தோண்டு செய்தவர் என்று அறியலாம். குலமகட்குத் தெய்வம் கோழுநனே, மற்ற புதல்வர்க்குத் தந்தையும் தாயும் அன்ரே ?

அன்னைக்கும் தந்தைக்கும் தோண்டு செய்யப் புகட்டும் உரிமையை தமிழ் மறையில் மட்டுமல்ல, தமிழனின் கருத்தை. நாகரீகமான நடத்தைகளே முதல் நூலாகக்கோண்டு பின்பு வழிநூலாக வடிக்கப்பட்ட ஆங்கில மறையிலும் காணலாம். "Honour Thy Father and Thy Mother, that Thy days may be long upon the earth" நம்மைப் பத்து மாதம் சுமந்து படமுடியாத் துன்பங்கள் பட்டு, பேற்றுப் போற்றி வளர்த்தவள் நம் தாய். ஈன்று புறந்தருதலும், சான்ரோன் ஆக்குதலும் கடனைக் கருத்திற்கோண்ட அன்னையும் பிதாவும் நமது முதல் தெய்வம். 'பேற்ற தாயும் பிறந்த போன்னுடும் நற்றவவானினும் நனி சிறந்தனவே' 'போற்றிதாய் என்று தாளங்கள் கோட்டடா! போற்றிதாய் என்று போற்குழல்

ஊதடா! ஆதிப்பரம்பொருளின் ஊக்கம் அதை அன்னையெனப் பணிதல் ஆக்கம்' என்று கவிச்சக்கரவர்த்தி பாரதி பாடியது இப் புவிமக்களின் செவிகளிலே என்றும் ஒலித்துக்கொண்டிருக்குமல்லவா? 'அன்பே உருவாய், ஆனவர் தம்மை அஞ்சலி செய்திடுவோம், அன்னையெனும் பெயர்தன்னை வணங்கி அஞ்சலி செய்திடுவோம்'' என்று தித்திக்கும் சேந்தமிழ்ப் பாட்டிலே அன்னையின் புனிதத் தன்மையைப் பட மேடுத்துக்காட்டி, அக் கருத்தை எத்திக்கும் பரவச்செய்த கோத்தமங்கலம் சுப்புவின் பாடல்கள் பேசுந்தரத்ததோ? பாராளும் வேந்தனையும், உறவினர் முதலியோரையும் இன்ப வாழ்வையும் வெறுத்து வீடுபேறு பெற விரைந்து சென்று, பற்றற்ற பரம்பொருளே பற்ற எண்ணி, எஞ்ஞான்றும் மனம், வாக்கு, காயத்தால் ஓர் கடவுளைப் போற்றிப் புகழும் அன்பான உள்ளம் பெற்றிருப்பினும் தன்னைப் பொன்னேபோல் போற்றி, 'வட்டிலிலும் தோட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும் கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்துச் சிறு வயதில் பாலூட்டி, சீராட்டி, தாலாட்டிய அன்புருவான அன்னை இறந்த பிறகு,

'' நொந்து சுமந்துபெற்று நோவாம லேந்திமுலை
தந்து வளர்த்தெடுத்துத் தாழாமே — யந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றித் தாய்தனக்கோ
மெய்யிலே தீ மூட்டு வேன்.

வேகுதே தீயதனில் வெந்து பொடி சாம்பல்
ஆகுதே பாவியே னையகோ — மாகக்
குருவி பறவாமற் கோதாட்டி யென்னைக்
கருதி வளர்த்தெடுத்த கை ''

என்று ஊனுருகப் பாடிய பட்டினத்தடிகளின் பாட்டு பற்றற்ற ஒருவருக்கும் அன்னையிடம் பெற்றுள்ள பற்றை விளக்குகிறது. இதை மனத்திற்கொண்டு நம்மைப் பெற்றெடுத்த அன்னைக்கும், இவ்வுலக ஜீவராசிகள் அனைத்திற்கும் அன்னையாகத் திகழும் அன்புருவான ஆண்டவனுக்குத் தன்னையும் கருதாது தோண்டு செய்வோம். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று சங்க காலத்தில் எழுப்பப்பட்ட குரலைக் கோள்கையாகக் கொண்டு வாழும் தமிழர்கள் உலக மக்கள்

அனைவரையும் தாய், தந்தை என்ற நோக்குடன் கண்டு மக்களுக்குச் செய்யும் தொண்டு மகேஸ்வரனுக்குச் செய்யும் தொண்டு என்று திருமூலரின் வார்த்தையை மலரச் செய்வோம். ஆண்டவனே அன்னையின் மறுஉருவம் என்றும், தில்லைத் தாண்டவனே தந்தையின் திருவுருவம் என்றும் கொள்வோம் 'தந்தையும் தாயும் நீ, என் உயிர்த்துணையும் நீ' என்று தாயுமானவர் பாட்டிலும் 'ஈன்றருளுமாய் எனக்கு எந்தையுமாய் உடன் தோன்றினராய்' என்று தேவாரம் அப்பர் குரலில் பேசுவதாலும் அதுவே நம் ஆன்றோர் வழி, சான்றோர் வழி. வள்ளுவன் வழி.

வள்ளுவன் வழியிலும் சொல் அழகு, பொருள் அழகு மிளிர்கின்றது. ஒரு தாய் தன் சேயிற்கு எவ்விதம் நல்லுபதேசங்களை நயம்பட உரைப்பாளோ, ஒரு தந்தை தன் தனயனுக்கு நல்வழியை எவ்விதம் வகுத்துக் கொடுப்பானே அங்ஙனமே 'குறள்' நமக்கும் வேளாளன் முதல் வேந்தன் வரை உள்ள அனைவருக்கும் சாலச் சிறந்த அருட்சாலுக்கு வழிவகுத்துக் கொடுப்பதால்

"வள்ளுவர் தந்த திருமறையைத்—தமிழ்
மாதின் இனிய உயிர் நிலையை
உள்ளம் தெளிவுறப் போற்றுவமே—என்றும்
உத்தம ராகி ஒழுகுவமே"

என்று பாடினார்போலும் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள்.

(தொடரும்.)

வாழி ! வாழி !!

திரு. K. C. சுப்பிரமணியம், சென்னை

ஊன சம்பந்தம் நீக்கிய ஞானசம்பந்த
கூன மாம்பாண்டி வேந்தன் கூனீக்கி
நாளும் இன்னிசையால் தீந்தமிழ் பரப்பிநேய்
நாளும் நின்புகழ் வாழி வாழி !

உடல் வளர்க்கும் மூலிகைகள்

திரு. V. பலராமையா B. A., B. L., அவர்கள்,
District Magistrate, Cuddalore.

(மலர் 19, இதழ் 7, பக்கம் 390 இன் தொடர்ச்சி)

கரிசாலை 5

Tel: குண்டக்கல் ராகு, Mal: கஞ்சுண்ணி, Sans: ப்ருங்கராஜ், இது தமிழ் நாட்டில் - கரிசலாங்கண்ணி, கையாந்தகரை, கரிப்பான் என்றும் அழைக்கிறார்கள். மருந்துக்கடைகளில் கிடைக்காது.

இம்மூலிகை சாதாரணமாய் எல்லா ஊர்களிலும் பட்டணங் களிலும் ஈரம் இருக்கும் இடங்களில் பயிராகிறது. இதைத் தெரியாதவர்கள் சிலரே யிருப்பர். நஞ்சை வரப்புகளில் அதிக மாயிருப்பினும் புஞ்சைக் காடுகளில் காணும் கரிசாலையே விசேடமானது.

குறிப்பு :- இதில் சுலபமாக ரத்தத்தில் கலக்கக்கூடிய அயச் சத்து இருக்கிறது, பாண்டு ரத்தஹீனம் (Anaemia) இம்மூலிகையைக் கண்டஅளவில் பறக்கும். ஆனல் கீழ்க் குறிப்பிட்டபடி இம் மூலிகையைக் கருப்பேற்றி சாப்பிடுதலே விசேடமானது. குழந்தைகளுக்கும் வயோ திகர்களுக்கும்கூட நல்ல பலனேயளிக்கும். கரும் கரிசாலையாக மாற்றி அதன் சூரணம் ஒரு வருடம் கொண்டால் நரைத்த மயிர் கறுக்கும். திரை போகும், காயசித்தியுண்டாகும். இது சாஸ்திர சம்மதம்.

கரிசாலையை நிறம் ஏற்றும் முறை

சேங்கோட்டை ஒரு மூட்டை வாங்கி அக்கோட்டைகளின் மேல்தோலை நீக்கி 2 அடி ஆழமுள்ள ஒரு தோட்டியில் கோட்டைகளைக் கோட்டி கோ முத்திரத்தை கோட்டைகள்

முழுகும்படி விட்டு வைத்தல் வேண்டும். அப்படியே விட்டு வைப்பின் அக்கோட்டை ஊறி அழுகும். அதை எடுத்து மண் பாதியில் அழுகிய சேங்கோட்டையை எடுத்துப் பரவலாயிட்டு அதன்மேல் அரை அடி மணலும் மண்ணும் கலந்து இட்டு 10 நாட்கள் கடத்தவும். பிறகு கரிசாலையை அந்தப் பாத்தியில் நட்டுவிடவும். ஒரு மாதம் கழித்து சிறுங்கருப்பாக இலைகள் வரும். பிறகு அந்தச் செடிகளைப் பிடுங்கி ஷை உரமிட்ட மற்றொரு இடத்தில் பிடுங்கிநட ஒரு மாதத்திற்கெல்லாம் முன்னைவிடக் கருக்கும். அதேபோல் மூன்றுமுறை செய்ய சுத்த கருப்பாகும். இதேபோல் பொற்றலை, வல்லாரை முதலிய மூலிகைகளைக் கருப்பு செய்து சாப்பிடின் தகுந்த கற்பமாகும்.

சாப்பிடும் முறை:- முதலில் வந்த கரும் கரிசாலையைச் சாப் பிடத் தொடங்க வேண்டும். பிறகு இரண்டாவது வருவதையும் மூன்றுவது வருவதையும் தொடர்ந்து சாப்பிடுதல் வேண்டும். முற்றும் கருத்ததை முதலிலேயே சாப்பிடத்தொடங்கின் குற்றம் வரும். உடல் தாங்காது. ஷை கரிசாலையைச் சன்னமாய்ப் போடி செய்து வெறுகடிப் பிரமாணம் தேன் ½ தேக்கரண்டி. ¼ தேக் கரண்டி நெய் கூட்டிச் சாப்பிட வேண்டும். 6 மாதங்கள் கொள்ள நரை திரை மாறுமென்பது சாஸ்திர சம்மதம்.

உபயோக முறை (சாதாரண கரிசாலை)

கரிசாலை சர்பத்

கரிசாலையின் வேர்களை வெட்டி அகற்றி மற்றதை உரலி லிட்டு இடித்து ரசம் பிழியக் கருத்த ரசம் வரும். இந்த ரசத்தில் ½ படிக்கு ½ வீசை சர்க்கரை (சீனி) கலக்கி அடுப்பேற்றிப் பாகு பதம் வரும்போது இறக்கிக் கொஞ்சம் பச்சைக் கற்பூரம், வருத்துப் போடிசெய்த மிளகு பலம் ½, குங்குமப்பூ தோராயமாய் சேர்த்து கலக்கி புட்டியில் வைத்துக்கொள்ளவும். ஒரு டீஸ்பூன் சர்ப்பத்தில் ஜலம் கலந்து காலை மாலை சாப்பிடவும்.

கரிசாலை சூர்ணம்

கரிசாலையின் வேர்களை நீக்கி அலம்பி நிழலில் உலர்த்தி இடித்து வஸ்திரகாயம் செய்து காலை மாலை தேனும் நெய்யும்

கூட்டிச் சாப்பிடவும். இதனுடன் கீழ்க்காய் நெல்லி சூரணத்தை யும் கூட்டிச் சாப்பிடுதல் நன்று.

காமாலைக்கும், நீராம்பலுக்கும் (Ascites) நன்முக வேலை செய்யும். கரிசாலை இலையையும் கீழாநெல்லியையும் பச்சையாக அரைத்து கடுக்காயளவு காலை மாலை மூன்றுநாள் கொடுத்து; காலை மாலை துளசி ரசத்தை உச்சித் தலையில் தேய்த்துவர காமாலை குணமாகும். உப்பில்லாப் பத்தியம் முக்கியம். பால் சாதம் சர்க்கரை சேர்த்து சாப்பிடுதல் நன்று. மோர் உப்பு இல்லாமல் சாப்பிடலாம். யானை சிறங்கு, நமச்சல் இவை களுக்கு ஷை கல்கம் கைகண்ட மருந்து. மருந்து உண்ணும் நாட்களில் குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்ய வேண்டும். இம்மூலிகையின் ரசத்தைப் பிரதினமும் தலையில் தேய்த்துக் குளித்து வரலாம்.

கரிசாலை சுரசத்தில் பாதி சுத்த ஜலம் சேர்த்து 4, 5 சொட்டு பசு நெய்விட்டுப் பிரதினம் காலை 40 நாட்கள் கொள்ள மன்மத னைப்போல் அழகனுவானென்றும், மூன்று மாதங்கள் கொள்ள நரைதிரை மாறுமென்றும் சித்தர்கள் கூறியுள்ளனர்." இதில் ஆச்சரியப்படுவதற்கில்லை. இம் மூலிகையின் விசேடத்தைப் பூர்ணமாயனுபவித்த இராமலிங்கசுவாமிகள் இதன் பெருமையை வேகுவாய்ப் பாராட்டியுள்ளார்.

பொற்றலை கையாந்தகரை - 6

இம் மூலிகை காயசித்தி மூலிகைகளில் ஒன்று. இதில் தாம்பிரமும் பொன் சத்தும் உள்ளன. நீர் ஒடும் இடங்களில் குத்துக் குத்தாகவும் படர்ந்து வளர்ந்து இருக்கும். கரிசாலை மேன்முல் வரும் வாசனையே இதற்கும் வரும். கரிசாலை கொடுக்கும் பலன்களை எல்லாம் கொடுப்பதும் தவிர இது சரீரத்திற்குப் போற்சாயலைக் கொடுக்கும். இதன் கொடிகளை நம் வீட்டுக் கிணற்றடியில் நட்டு வைத்தால் செழிப்பாகப் படர்ந்து வளரும். வேண்டியபோது பறித்துக்கொள்ளலாம். பங்களாக் களில் கண்ட கண்ட செடிகளை வைத்துத் தண்ணீர் இறைத்துப் பயிர் செய்வதைக்காட்டிலும் இப்படிப்பட்ட மூலிகைகளை வைத்துப் பயிர் செய்தால் மனிதன் வியாதியற்று இருக்கலாம். இம்மூலிகை மருந்துக்கடைகளில் கிடைக்காது.

உபயோகமுறை

காமாலைக்கு இது ஒரு சிறந்த மூலிகை. இதன் சுரசத்தைத் தலையில் தேய்த்ததும் இம்மூலியில் கொஞ்சம் மிளகு சேர்த்துக் கல்கத்தை உள்ளுக்குக் கொடுக்கலாம். இந்தச் சுரசத்தில் அய செந்தூரம், தேன்விட்டுக் காமாலைக்குக் கொடுத்து இரண்டு நாட் களில் பூரணகுணமடைந்திருப்பது என் அனுபவம்.

இம்மூலிகையை நிழலில் உலர்த்தி சூரணம் செய்து நெய்யும் தேனும் கூட்டிச் சாப்பிடலாம். வல்லாரையில் உப்பு எடுப்பது போல் இதிலும் உப்பேடுத்துக் காலை மாலை ஓர் மிளகளவு சாப்பிட உடலிலுள்ள வியாதியைப் போக்கிப்போற்சாயலை உண்டாக்கும்.

இதன் சுரசத்தில் மேலே குறிப்பிட்ட நயன்சுத்தித் தைலம் தயார் செய்து கொண்டு கபசுத்தி செய்தல் நன்று.

கற்பவிதிகளில் அனுசரிக்க வேண்டிய முறைகளில் கப சுத்தி ஒரு முக்கியமான இடம் பெற்றுள்ளது. (தொடரும்.)

EXTRACT FROM VISITORS' BOOK

Dharmapuram Adhinam
Sri Sivalokathiagarajaswami Devasthanam,
Achalpuram.

சிவகாசி கூட்டு வழிபாட்டு அன்பர்கள் திருத்தல யாத்திரை

இன்று சிவகாசி வார வழிபாட்டுச் சங்கம் யாத்திரைக் குழுவுடன் சிவலோகத் தியாகராஜர் திருக்கோயில் வந்து ஆண்டவனைத் தரிசிக்க வாய்ப்புக் கிடைத்தது. மூர்த்திகளெல் லாம் வெகு அழகாகத் தோற்றம் அளித்தார்கள். கோயில் வெகு சுத்தமாகவும், கவர்ச்சிகரமாகவும் வைக்கப்பட்டுள்ளது அர்ச்சக ரும், ஓதுவாமூர்த்தியும், நிர்வாக அதிகாரியும் ஏனைய ஊழியர் களும் பக்தியுடன் தொண்டாற்றிவருகிறார்கள். எல்லோருக்கும் ஆண்டவன் திருவருள் பாலிப்பாராக.

(ஒ-ம்) எஸ். நடராஜ நாடார்,
ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி,
மதுரை, 11—2—60.

செய்திகள்


கன்னியாகுமரியில்

லக்ஷார்ச்சனையும் புஷ்பாஞ்சலியும்

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் 22-6-60 புதன்கிழமை காலை முறைப்படி ஸ்ரீ சோக்கலிங்கப்பெருமான், ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்கை தரிசனம் முடித்துக்கொண்டு ஸ்ரீ கன்னியாகுமரி அம்மன் தரிசனத்திற்கு எழுந்தருளினார்கள். புதன்கிழமை மாலை திருநெல்வேலி சேர்ந்து வியாழக்கிழமை ஸ்ரீ நெல்லையப்பர் காந்திமதி அம்மன் தரிசனம் செய்து இரவு கன்யாகுமரிக்கு எழுந்தருளினார்கள். அங்குக் கோயில் நிர்வாக அதிகாரி முதலியவர்களால வரவேற்பு அளிக்கப்பட்டது. வெள்ளிக்கிழமை விடியற்காலம் ஸ்ரீ விநாயகருக்கு அபிஷேகம் அருச்சனை இவை நடத்தியபின் ஸ்ரீ கன்யாகுமரி அம்மனுக்கு லக்ஷார்ச்சனை ஆரம்பிக்கப்பட்டது. ஸ்ரீ அம்பாளுக்கு விசேஷ அபிஷேக அலங்காரம் செய்வித்தார்கள். ஜனங்கள் மிகவும் பக்திசிரத்தையுடன் கோயிலில் கூடியிருந்தார்கள். ஸ்ரீ அம்பாளின் தோற்றம் எல்லோருடைய உள்ளத்தையும் கவர்ந்தது.


24—6—60 வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்ட லக்ஷார்ச்சனையை மறு வெள்ளிக்கிழமை 1—7—60 பூர்த்தி செய்வதெனத் திருவுளம் கொண்டார்கள். பிரதினமும் இருமுறை கோயிலுக்கு எழுந்தருளிப் பாராயணம், ஜபம் முதலியவைகளை ஸ்ரீ தேவியின் சந்நிதியிலேயே செய்தருளினார்கள். தினந்தோறும் உச்சிக்கால அபிஷேகத்தை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் பெருந்திட்டத்தில் நடத்த உத்தரவு செய்திருந்தார்கள். நிவேதனங்களும் நல்ல முறையில் தயார்செய்யப்பெற்றன. உச்சிக்கால தீபாராதனை முடிந்ததின் குழந்தைகளுக்குப் பாலும் ஏழைமக்களுக்குப் பிரசாதங்களும் விநியோகம் செய்யப்பட்டன. கன்யாகுமரி வாசிகள் பெரும் ஊக்கத்துடன் கோயிலுக்கு வந்து தரிசனம் செய்தார்கள். பூர்த்தி தினமாகிய வெள்ளிக்கிழமை விடியற்காலையிலேயே ஜனங்கள் திரளாகக் கூட ஆரம்பித்தார்கள். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் நவராத்திரியில் ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்கைசந்நிதியில் ஸுவாஸினிபூஜை செய்விப்பது போலவே ஸ்ரீ கன்யாகுமரியின் சந்நிதியிலும் ஸுவாஸினிபூஜை

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான
ஆச்சாள்புரம் ஸ்ரீ சிவலோகத் தியாகராஜசுவாமி தேவஸ்தானம்




திருக்கோயில் முன் தோற்றம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சோந்தமான
ஆச்சாள்புரம் ஸ்ரீ சிவலோகத் தியாகராஜசுவாமி தேவஸ்தானம்




ஸ்ரீ திருஞானசம்பந்தர் திருக்கல்யாணக் காட்சி

திருக்கயிலாய பரம்பரைத்
தருமையாதீனத்திற்குச் சோந்தமான ஆச்சாள்புரம்
ஸ்ரீ சிவலோகத் தியாகராஜசுவாமி தேவஸ்தானத்தில்



திருஞானசம்பந்தர் திருமணக்கோலத்துடன்
புஷ்பப்பல்லக்கில் திருவீதியுலா வருதல்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சோந்தமான
வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில்



நீராழி மண்டப. வீநாயகர் அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம்

செய்விப்பதெனத் திருவுளம் கோண்டார்கள். நல்ல களாகக் கிடைத்து. பூஜையும் பரிஷ்காரமாக நடந்தபின் ஸ்ரீ அம்மனுக்கு மகாபிஷேகம் ஆரம்பமாயிற்று அந்தக் கோயிலில் இம்மாதிரி அபிஷேக ஆராதனைகள் நிகழ்ந்த தில்லை என்று எல்லோரும் ஒருமுகமாகச் சோல்லும் முறையில் பால், பழவகைகள், பழனி பஞ்சாமிர்தம், பன்னீர், சந்தனம், காவேரி தீர்த்தம், கங்கா தீர்த்தம் முதலியன அபிஷேகம் செய்விக்கப்பட்டன. ஏராளமான மக்களுக்குப் பிரசாதங்களும் பாலும் விநியோகம் ஆயின. மாலை 7 மணி அளவில் பூர்த்தி அர்ச்சனையும், புஷ்பாஞ்சலியும் நடக்கும் எனக் கேள்விப்பட்டு ஏராளமான மக்கள் கோயிலில் கூடியிருந்தார்கள். கோயிலுக்குப் புறப்படுமுன் கன்யாகுமரியில் வேளாள சங்கம் நடத்திவரும் பள்ளிக்கூடத்திற்கு ரூ. 200-ம், கன்யா குருகுலத்திற்கு ரூ. 25-ம் நன்கோடை அளித்தருளினர்கள். மாலை திருமஞ்சனம் முடித்துக்கோண்டு கோயிலுக்கு எழுந்தருளியதும் மக்களின் உற்சாகமும். பக்தியும் கரைபுரண்டு ஓட ஆரம்பித்தது. ஸ்ரீ விநாயகப் பெருமானுக்கு முதலில் புஷ்பாஞ்சலி செய்விக்கப் பட்டுப் பின் ஸ்ரீ தேவியின் சந்நிதியில் புஷ்பாஞ்சலி ஆரம்பிக்கப் பட்டது. பல நிற நறுமணமுள்ள பூஜார்ஹதையான மலர்கள் பல ஊர்களிலிருந்தும் வரவழைக்கப்பட்டிருந்தன மலர்களைத் தங்கத் தாம்பாளம் கோண்டு அர்ச்சனை செய்தார்கள். கர்ப்ப கிருகம் பூராவும் புஷ்பங்கள். ஸ்ரீ தேவி, அவைகளின் மத்தியில் மந்தஹாசத்துடன் காட்சி கோடுத்தது எல்லோருக்கும் கண் படைத்த பயனை அளித்தது. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் மெய்மறந்து வழிபாட்டில் ஈடுபட்டிருந்தார்கள். தீபாராதனை ஆனபின் பிரியா விடைபேற்றுக் கோயிலைப் பரிக்ரமம் செய்து ஜாகைக்குத் திரும்ப எழுந்தருளினர்கள். தேவஸ்தான அடியார் களுக்கு மரியாதை செய்யும்படி உத்தரவு பிறந்தது. ஸ்ரீ அம்பாளின் லக்ஷார்ச்சனை தினம் புத்தாடையுடனும். அறு சுவை உண்டியுடனும் கூடி எல்லோருக்கும் தீபாவளி தினமாக மாறிற்று.

ஏழை மக்கள் பலருக்கும் ஆடைகளையும், உணவையும் அளித்தருளினர்கள். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் செய் தருளிய லக்ஷார்ச்சனை பூர்த்தியாகிவிட்டதே என்ற ஏக்கம் எல்லோர் மனத்திலும் ஏற்பட்டது. எல்லோரும் ஒரு முகமாக

ஆண்டு தோறும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஸ்ரீ குமரி அன்னைக்கு இவ்வாறே லக்ஷார்ச்சனை செய்விக்க வேண்டுமென்று பிரார்த்தனை தோடுத்தார்கள். லக்ஷார்ச்சனை பூர்த்தியானதைக் கருதி ஸ்ரீ தேவியின் கருப்பகிரஹம் செல்லும் படிகளுக்கும், நிலைகளுக்கும் பித்தளைத் தகடு அமைக்கும்படியும் ஸ்ரீ அன்னையின் பாதங்களில் ஒளி வீசும்படி மூன்று கிலோயுடன் கூடிய நேர்த்தியான வேலைப்பாட்டுடன் கூடிய வெள்ளி விளக்கு ஒன்றும் அர்ப்பணிக்குமாறும், ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் உத்தரவு பிறப்பித்தார்கள். ஆதலால் இரண்டே நாளில் அத் திருப்பணியும் பூர்த்தியாயிற்று.

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் இணையற்ற அருளினுல் இவ்வழிபாட்டில் கலந்துகொண்டு ஸ்ரீ தேவியின் திருக் கோலத்தை வேளைக்கு ஒரு மாதிரி தரிசனம் செய்யும் பாக்கியம் பெற்ற அடியார்கள் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் கருணையை வாயாரப் புகழ்ந்து மனமார வாழ்த்தி ஸ்ரீ தேவியை இம்முனிபுங்கவரின் அருளாட்சி பல்லாண்டு தழைத்தோங்க வேண்டுமெனப் பிரார்த்தனை செய்தார்கள்.

இந்த லக்ஷார்ச்சனையில் திருவருள் தோய்ந்த இரண்டு விசேஷங்களைக் குறிக்காமல் இருக்க முடியாது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் குமரிக்கு எழுந்தருளிய தினம் 24—6—60 கைலாசத்திற்கு எழுந்தருளிய மார்க்கத்தில் கங்கையில் புனித திருமஞ்சனம் 24—6—1959ல் செய்தருளினார்கள். ஆண்டு பூர்த்திவிழாவைக் குமரியில் நீராடி வழி பட்டார்கள். இரண்டாவதாகச் சாதாரணமாகப் பூர்த்தி தினமாக கொண்டாட உத்திரவான தினம், அஷ்டமியும், ஹஸ்த திரு நக்ஷத்திரமும் சேர்ந்த வெள்ளிக்கிழமை சிறப்பளித்தது.

ஸ்ரீ கன்யாகுமரியில் தங்கி எழுந்தருளிய தினங்களில் 26—6—60 ஞாயிற்றுக்கிழமை சுசீந்திரத்திற்கும், 27—6—60 திங்கட்கிழமை குமரகோவிலுக்கும் வேள்விமலை, ஏரகம் என்று வழங்கப்படும் தலமாகிய நாகர்கோவிலுக்கும், 29—6—60 புதன்கிழமை திருவனந்தபுரம் ஸ்ரீபத்மநாபஸ்வாமி கோயிலுக்கும் திருவட்டாறு ஸ்ரீ ஆதிகேசவப்பெருமாள் கோயிலுக்கும் எழுந் தருளி வழிபட்டார்கள்.

ஸ்ரீ குமரி அன்னையின் லக்ஷார்ச்சனைவிழா வைபவத்தில் நாகர்கோயில் பிரபலஸ்தர்களும், தேவஸ்தானம் நிர்வாக போர்டு தலைவரும், அங்கத்தினர்களும், அறநிலையப் பாதுகாப்பு உதவி ஆணையாளரும், முன்னுள் ஆணையாளரும், உள்ளூர் சப்-ஜட்ஜ் முதலிய அதிகாரிகளும் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது.

தருமபுரத்தில்

மாங்கன்று நடும் விழா

நிகழும் சார்வாரி ஆண்டு ஆனித் திங்கள் 7 ஆம் நாள் (20—6—60) திங்கட்கிழமை மாலை 5 மணிக்குத் தருமபுரத்தில் ஆதீன மடாலயத்திற்கு வடமேற்காகிய வாயுமூலையில் தருமை யாதீன முனிபுங்கவர்களும் அடியவர்களும் நீராடிய புனித முடைய தபஸ்விக்கேணி என்னுங் திருக்குளத்தையடுத்து பெரிய தோப்பு என வழங்கும் தியானத்தோப்பில் மாங் கன்றுகள் நடும் விழா நடைபேற்றது. தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் திருக் கரத்தால் வைதிகமுறைப்படி மாங்கன்று நடுவிழா தோடங்கப் பேற்றது. அங்குப் பெருந் திரளாக மாயூரம் முதலிய இடங் களிலிருந்து பேருமக்கள் பலர் வந்திருந்தனர். ஒவ்வோரு வரும் ஒவ்வோரு கன்றை நட்டனர். வந்திருந்த பேருமக்கள் பலருக்கும் மாலைச் சிற்றுண்டி சிறந்த முறையில் அளிக்கப் பேற்றது.

பின்னர் தருமை ஆதீனப் பல்கலைக் கல்லூரிப் பிரின்ஸிபால் முதுபேரும் புலவர் திரு. முத்து. சு. மாணிக்கவாசகனார் அவர்களும் ஆதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர் செஞ்சோற்கோண்டல். வித்துவான். திரு. சோ. சிங்கார வேலனார், B. A., அவர்களும் முறையே மாங்கனி நடுவிழாவைப் பற்றியும், மாங்கனிகளைப் பற்றியும் சிறந்த எடுத்துக்காட்டு களுடன் சொற்பேருக்காற்றினர், குறுகிய காலத்தில் விழா ஏற்பாடு செய்து விழாவிற்கெனத் தனியாகப் பந்தல் முதலியன போட்டு ஒப்பனை செய்யப்பேற்றிருந்தது எல்லோருக்கும் வியப்பை யளித்தது.

வைத்தீஸ்வரன் கோயிலில் கும்பாபிஷேகம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் சார்வரி ஆண்டு வைகாசித் திங்கள் 31 ஆம் நாள் (13—6—60) காலை 10-15-க்கு மேல் 12-க்குள் சித்தாமிர்த தீர்த்த நீராழி மண்டப ஸ்ரீ விநாயகருக்கு அஷ்டபந்தன கும்பாபிஷேகமும், நீராழி மண்டப கலச கும்பாபிஷேகமும் சிறப்புற நிகழ்ந்தன. கும்பாபிஷேகத்திற்கு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபட்டார்கள்.

சித்தாமிர்த தீர்த்தம் அண்மையில் தூர்வாரித் தூய்மை செய்யப்பட்டது. மேலும் மண்டலாபிஷேகக் கிருத்திகை முதலிய சிறப்பு விழா நாட்களில் மக்கள் கூட்டம் மிகுதியாயிருக்கின்றது. ஆதலால் தீர்த்தத்தில் நீராடும்பொழுது பல இன்னல்களை அடைகின்றனர். அவற்றைப் போக்கப் படித்துறைகளில் கம்பிகள் போடப்பேற்றிருக்கின்றன.

சீகாழியில் அபிஷேக ஆராதனை

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ திருஞானசம்பந்த சுவாமிக்கு அபிஷேக ஆராதனைகள் நிகழும் சார்வரியாண்டு ஆனித்திங்கள் 9 ஆம் நாள் (22—6—60) புதன்கிழமையன்று காலையில் சிறப்புற நடைபெற்றன. மாலை 5 மணி முதல் திருமுறைப் பாராயணமும் சமயச் சொற்பொழிவும், இரவு சுவாமி புறப்பாடும் நடைபெற்றன. ஸ்ரீ திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் கோயிலில் மாலை 6 மணிக்கு "வாழ்க அந்தணர்" என்ற தலைப்பில் தருமபுர ஆதீனப் புல்லலைக் கல்லூரி பிரின்ஸிபால் முதுபெரும் புலவர் திரு. முத்து. சு. மாணிக்கவாசகனார் அவர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தர் வாரவழிபாட்டுக் கழகம்

தருமை ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தர் வாரவழிபாடு, திருக்கயிலாய பாம்பரைத் தருமையாதீன தேவஸ்தானமாகிய கருங்குயில்நாதன்பேட்டை ஸ்ரீ சத்திபுரீசுவரசுவாமி திருக்கோயிலில் 26—6—60 அன்று நிகழ்ந்தது. 19—6—60இல்

கங்கைகோண்டசோழபுரம் பிரகதீஸ்வரர் திருக்கோயிலிலும் 12—6—60 இல் கூறைநாடு ஸ்ரீ புனுகீஸ்வரசுவாமி திருக் கோயிலிலும் 3—7—60 இல் திருஇந்தளூர், ஸ்ரீதான்ருன் றீஸ்வரசுவாமி திருக்கோயிலிலும் சிறப்புற நிகழ்ந்தது. பலர் வந்து வழிபட்டனர். கங்கைகோண்டசோழபுரம் வழிபாட்டில் சென்னை மாநில அறநிலைய ஆணையர் உயர்திரு. A. உத்தண்ட ராமப் பிள்ளை B. A-, B: L, I, A- S. அவர்கள் வந்து கலந்து கொண்டு சிறப்புச் சொற்பொழிவாற்றினர்கள்.

சென்னை சமயப்பிரசார நிலையத்தில்

வேளூர் மண்டலாபிஷேகக் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா

சென்னைத் தியாகராயநகரிலுள்ள தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலயத்தில் 22—6—60 மாலை மணி 7க்கு திரு. T. M. மார்க்கசகாயஞ் சேட்டியார் M. A. அவர்கள் தலைமையில் மண்டலாபிஷேகக் கிருத்திகைப் பிரசாதம் வழங் கும் விழாச் சிறப்பாக நடைபெற்றது. வேளூரில் எழுந்தருளி அருள்வழங்கும் ஸ்ரீ சேல்வமுத்துக்குமாரசுவாமியின் திருவுருவப் படம் நான்கு கலரில் வெளியிடப்பட்டிருக்கிறது. அப்படம் மந்த்ர பூர்வமாக அன்று பரதிஷ்டை செய்யப்பட்டு பூசனை சிறப் பாக நடைபெற்றது. வேளூர்த் திருப்பதிகங்கள் பாராயணத் திற்குப் பிறகு தலைவர் சேட்டியார் அவர்கள் சமயம் கூறும் தத்துவங்களையும், சமய நிலையங்களின் தத்துவங்களையும் இன்று விஞ்ஞானத்தின் மூலமாக நன்கு தெரிந்துகோள்ள வாய்ப் பிருக்கிறது. மூர்த்தி, தலம். தீர்த்தம் இவற்றால் மக்கள் பல நலன்களைப் பெறுகிறார்கள். விஞ்ஞானம் விரிவ டைந்துவரும் இந்நாளில் நமது மெய்ஞ்ஞானத்தை மக்கள் நன்கு புரிந்துகொண்டு போற்றத் தலைப்பட்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். எல்லா அன்பர்கட்கும் திருவருட் பிரசாதம் வழங்கப்பட்டது. ஸ்ரீ சேல்வமுத்துக்குமாரசுவாமி படத்தினைப் பல பக்தர்கள் ஒரு ரூபாய் விலை கொடுத்து வாங்கிச் சென்றனர். ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகளவர்கள் வரவேற்புரையும் நன்றியுரையும் கூறினர்கள், திரு. இலக்கு மணன் கடவுள் வாழ்த்துப்பாடினர்.

ஸ்ரீ மாணிக்கவாசகர் குருபூஜை விழா

சென்னைத் தியாகராயநகரில் உள்ள தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தில் 28—6—60 மாலை ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகளின் குருபூஜை விழா சிறப்பாக நடைபேற்றது. மதுரை ஆதீனம், மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் விழாவிற்குத் தலைமை வகித்தார்கள். நிலையத்தின் பழைய மாணவி, தேவார இசைமணி. இந்திரா கடவுள் வணக்கம் பாடினார். மகாசந்நிதானம் அவர்கள் தமது தலைமையுரையில் சமயாசாரியார்களால்தான் நமது சமயம் இந்நிலையில் பாது காக்கப்பட்டது கிறிஸ்து சமயத்தைப் பரப்ப வந்த ஜி. யூ. போப் என்ற பாதிரியாரின் உள்ளத்தையும், நமது சமயத்தின் பக்கம் திருப்பியது திருவாசகம். திருவாசகம் கல் மனதையும் கரைந்து உருகச்செய்வது. பேசும்போ தெல்லாம் இறைவன் நாமத்தைப் பேசவேண்டும். பூசும்போதெல்லாம் திருநீற்றை நிறையப் பூசவேண்டும். கிறிஸ்தவர்களும், மற்றும் பிற மதத்தினரும் திருநீற்றின் பெருமையைப் போற்றிவருகிறார்கள். தற்கால வாசனைப் போடிகளைப் பூசுவது உடலுக்குக் கேடுதியை விளைவிக்கும் விபூதி பூசுவதால் பல நன்மைகள் விளைகின்றன என்று பல சான்றுகள் காட்டிப் பேசினார்கள்.

திரு. பா. சொக்கலிங்கம் அவர்கள் "மாணிக்கவாசகர் மாட்சி" என்ற பொருள்பற்றிப் பேசுகையில் மணிவாசகரின் வரலாறு உண்மையாக வாழ்க்கை நடத்துவோர்க்கு வழிகாட்டி யாக அமைந்துள்ளது என்பதை விளக்கினார்கள். திருமதி. சகுந்தலா அம்மையாரவர்கள் "மணிவாசகர் மாண்பு" என்பது பற்றிப் பேசுகையில் மணிவாசகரின் திருவாசகம் சாதாரண எளிய மக்களுடைய மனத்தையும் தோட்டி அவர்களை நல்வழிப் படுத்துகிறது என்பதை விளக்கினார்கள்.

குமாரி. கௌரி குழுவினர் "மாணிக்கவாசகர் வரலாறு" என்பதுபற்றி இனியதோரு கதாகாலட்சேபம் நிகழ்த்தினர். சிறு வயதுடைய கௌரி திறமையாகவும், இனிமையாகவும் கதாகாலட்சேபம் செய்ததை மதுரை மகாசந்நிதானம் அவர்கள் பாராட்டி ஆசீர்வதித்தார்கள்.

ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும், நன்றியுரையும் கூறுகையில் ஒவ்வோருவருக்கும் ஆசாரிய பக்தி அவசியம் இருக்கவேண்டும் அப்பக்தியே நம்மை உயர்த்துவது சைவர்கள் அனைவரும் சமயாசாரியர் நல்வர், சந்தானாசாரியர் நால்வர் ஆகிய குருமூர்த்திகளைத் தினந்தோறும் போற்றி வழிபடுவதால் அறிவுத்தெளிவும், சகல நன்மைகளும் அடைவார்கள் என்று குறிப்பிட்டார்கள். தேவார இசைமணி. திரு. வே. இலக்குமணன் கடவுள் வாழ்த்துப் பாடினர்.

திருமாற்பேற்றில்
சமயப் பிரசார வழிபாட்டுக் கூட்டம்

சென்னை தியாகராயநகரில் உள்ள தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப்பிரசார நிலையத்தின் மாதந்தர சமயப்பிரசார வழிபாட்டுக் கூட்டம். 3—7—60 ஞாயிற்றுக்கிழமை மாலை திருமாற்பேறு என்ற தலத்தில் நடைபெற்றது. மதுரைத் திருஞானசம்பந்தர் ஆதீனம் மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் சமயப் பிரசார வழிபாட்டுக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துச் சிறப்பாக நடத்திக் கோடுத்தார்கள். வழிபாட்டுக் குழுவினர் அன்று காலை வாலாஜாபாத் இந்துமத பாடசாலைக்கு விஜயம் செய்தனர். எல்லோரையும் பாடசாலை உரிமையாளர் திரு. வா. தி. மாசிலாமணி முதலியாரும், போறுப்பாளர் தணிகை அரசு முதலியார் அவர்களும் வரவேற்றனர். மாணவர்கட்கு மதுரை ஆதீனம் மகாசந்நிதானம் அவர்கள் ஆசி வழங்கித் திருநீறளித்தார்கள். ஆசி கூறுகையில் விபூதி உடம்பிலுள்ள துர்நாற்றத்தைப்போக்குவது, நெற்றியில் பூசுவதால் ஞாபகசக்தி வளர்கிறது, நோய்க்கிருமிகள் நம்மைச்சார ஒட்டாமல் தடுக்கின்றது, உடல் முதலிய கருவி கரணங்களையும், நிலம், நீர் முதலிய பஞ்சபூதங்களையும் மனிதன் உற்பத்தி செய்யவில்லை. இறைவன்தான் இவற்றை நமக்கு அளித்துள்ளார். எல்லா வளங்களையும் நாம் கேளாமலே கோடுத்துவரும் ஆண்டவனை மறவாமல் நன்றியறிதலோடு அவனை வணங்கி வழிபட வேண்டும். மாணவர்கள் இவ்விளமைப் பிராயத்திலேயே இப்பழக்கத்தை மேற்கோள்ளவேண்டும் என்று

குறிப்பிட்டு 800 க்கு மேற்பட்ட மாணவர்கட்கு உண்டியும். உறையும் அளித்துக் காத்து வரும் இந்துமத பாடசாலையின் தோண்டினைப் பாராட்டிப் பேசினர்கள். ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்களும், திரு. சிவகுமாரன் அவர்களும் மாணவர்கட்கு அறிவுரை கூறிச் சொற்பொழிவாற்றினர்கள். நடுப்பகலில் சமயப்பிரசாரக் குழுவினருக்குப் பாடசாலையார் மாகேசுவர பூசை செய்து உபசரித்தார்கள்.

மாலை 5-30 மணிக்கு வழிபாட்டுக் குழுவினரைத் திருமாற்பேற்றுப் பொதுமக்களும், ஸ்ரீ மணிகண்டேசுவரர் ஆலய தர்மகர்த்தரும், திருப்பணியாளர்களும் பூர்ணகும்பத் துடன் மாலை சூட்டி வரவேற்றார்கள். மேள வாத்தியத்துடன் பிரசாரக் குழுவினர் அவ்வூர் மாடவீதிகளை வலம் வந்தனர். ஊரார்களும் திருக்கோயில் அர்ச்சகர்களும் உடனிருந்து வழி பாட்டினைச் சிறப்பாக நடத்தி வைத்தனர். சங்கீத பூஷணம், திரு, பி, சுவாமிநாதன் அவ்வூர்த் தேவாரப் பதிகங்களை இசையுடன் ஓதி இறைவழிபாட்டில் எல்லோரையும் ஈடுபடுத் தினர். கோபுர வாயிலுக்கு முன் திறந்தவெளியில் ஏராளமான மக்கள் குழுமியிருந்தனர். கூட்டத்திற்குத் தலைமை வகித்த மதுரையாதீனம் மகாசந்நிதானமவர்கள் இந்துமக்கள் இம் மாதிரி மாதம் ஒரு முறை, வாரம் ஒரு முறை ஒன்று கூடி கூட்டு வழிபாடு நடத்தவேண்டும், கூட்டு வழிபாட்டினால் பலன்கள் நமக்கு அதிகம் கிடைக்கின்றன. இத்துறையில் தருமையாதீனப் பிரசார நிலையம் செய்துவரும் தொண்டு போற்றற்குரியது. சமயாசாரியார்கள் வழிபட்ட கோவில்களில் தனிச் சக்தி மிளிர்வதை இன்றும் காணலாம். இம் மாதாந்திர வழிபாட்டில் மக்கள் இன்னும் அதிகமாகச் சேர்ந்து பயன் பெறவேண்டும் என்று கூறினர்கள்.

பிறகு பேசிய ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் சமயாசாரியர்களுள் மூவர் வந்து தரிசித்த சிறப்பு உடையது இத்தலம். குற்றம் செய்த மக்களைப் பொறுத்து ஆட் கொள்ளும் ஆண்டவன் என்பதை இவ்வூர்த் திருத்தாண்டகத்தில் அப்பர் சுவாமிகள் குறிப்பிட்டுள்ளார்கள். ஆண்டவன் நாமத்தைச் சொல்லி, அவனது திருவடி வணங்குவார்க்கு உலக ஆட்சியும் கைகூடும் என்றும் அப்பர் சுவாமிகள் கூறியுள்ளார்கள் என்று குறிப்பிட்டார்கள்.

கயப்பாக்கம், திரு. சோமசுந்தரஞ் செட்டியார், திரு. என். ஆர். முருகவேள் முதலியோர் வழிபாட்டின் அவசியம் பற்றிப் பேசினர்கள். திரு. சிவகுமார் அவர்கள் அனைவர்க்கும் நன்றி தெரிவித்து அடுத்த மாதம் 7—8—60 மாலை திருப் போரூர்க்குச் சமீபத்தில் உள்ள திருஇடைச்சுரத்தில் வழி பாட்டுக் கூட்டம் நடைபெறும் என்று அறிவித்தார்கள்.

இரவில் கோயில் தர்மகர்த்தா திரு. மணிகண்ட முதலி யாரவர்களும், சென்னை மேயர் கம்பனி உரிமையாளர் திரு. R. மாசிலாமணி முதலியாரவர்களும் வழிபாட்டுக் குழுவின ருக்கு உணவளித்து உபசரித்தார்கள்.

EXTRACT FROM THE VISITORS' BOOK,

Dharmapuram Adhinam
Velur Sri Vaithianathaswami Devasthanam,
Vaithiswarankoil

இன்று 28—2—60 பிற்பகல் 3 மணிக்குப் பூந்தோட்டம் கழக உயர் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் மூவரும், நாற்பது மாணவ மாணவிகளுக்கும் தேவஸ்தானத்தின் சார்பில் அன்பான வரவேற்பும், இனிய உணவும் அளித்து, கோயிலை நன்கு சுற்றிப் பார்க்கவும், சன்னதி வழிபாட்டிலும் கலந்து செல்வமுத்துக்குமரன் அருளைப்பெற பேராதரவுகொண்டுள்ள ஆதீனத்தின் நிர்வாகத் தினருக்கு எங்கள் நன்றி என்றும் உரியதாகுக என்பதுடன், இத் தகைய இளம் சிறுவர்களுக்குத் தங்கள் ஆதீனம் காட்டும் பரிவு சைவமும், தமிழும் தழைக்க உறுதுணையாய் உள்ளது என்பதில் கல்விபால் கவனம்கொண்டுள்ளவருக்குப் பெருமையளிக்கக்கூடிய தாகும். வாழ்க குருபாதம்.

Sd. G. Swaminathan
Organiser
Excursion Group. Board Higher Ely. School
Punthottam.
Sd. S. Ramamirthaiyer
Sd. S. Thangavel Pillai
28—2—60.

சவுந்தரியந்தாதி

பவளக்கொடி அடிகள்

(மலர் 18, இதழ் 9, பக்கம் 562 இன் தோடர்ச்சி)

முத்தி யளித்திடு சட்டுவ
வட்டகை முக்கிய முக்கியமே
ஈத்தி யுரைப்பவர் சத்தினின்
மேய்ப்பத ஈற்சர ணுற்றவரே
பத்தி னுஞித்திய முத்திய
ளித்தருள் பத்மினி சற்குணியே
சித்தி தரத்தோழு சித்தியை
யுற்றிடு சித்துரு வக்குயிலே. 36

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

குயிலைப் பழித்தமொழி பயிலைத் தெளித்தவிழி
குவியப் பருத்த முலையாள்
கயிலைப் பொருப்புறையு மயிலைக் கருத்திலுறை
கலையைத் தரித்த நிலையைத்
துயிலைக் கழித்தினிய துயிலைப் பதித்தரிய
துயரைத் தொலைக்க வரியாய்
வேயிலைச் சிரித்தபிற வியைவிட் டெடுப்பதெவர்
வினையைத் தரித்த மனமே. 36

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

மனமே சினமே வளிகனலே
மண்ணே விண்ணே மறிசலமே
கனமே யறிவே பகையுறவே
கண்ணே யொளியே கனவெளியே
தனமே யமுதே சராசரங்கட்
கெல்லாந் தாயாய்த் தழைத்தோங்கும்
வனமே பிறவிக் கடல்கடக்க
வந்தே யுதவு மரக்கலமே. 37

எழுசீர்க் கழிநேடிலடி யாசிரிய விருத்தம்

கலவுமி யருந்துழி யோரவல் வந்துசிக்கு
மேன்கதை யதைக்கைப் பிடித்துன்
னிலவுபுகழ் சாகரப் பேருவேள்ள மேவ்வளவு
நீசிறி துரைக்க வந்தான்
மலவிரு ளறுக்குமேன் மாயையும் போமுனது
மலரடி கிடைக்கு மன்றே
வலகிலா ஞானவா னந்தகுரு பீடமேன்
னரசிளங் குமரி யரசே. 38

அறுசீர்க் கழிநேடிலடி யாசிரிய விருத்தம்

அரச ராறுவீ டடைந்துமேற்
கண்டிட வரியதோ ரானந்தக்
கரைக டந்தபே ரொளிவேளி
யிருத்திய காரணம் பலித்தன்றே
திரைக டந்த மாயையு
மலங்களுந் தேய்ந்தது செயலெல்லாம்
புரைவ றும்பதங் கிடைத்தது
பரம்பரி போய்யிலா மெய்வாழ்வே. 39

எழுசீர்க் கழிநேடிலடி யாசிரிய விருத்தம்

வான்பூத கணமாட வாய்நேருப் பேரியபேய்
வன்கைகள் கோட்டி யாடப்
பாழிதின் டோளலகை கைத்தாள மேற்றவுயர்
பரத நாடக மாடினேன்
சூழ்பித்த மானதோரு கமலனைத் தலைகோய்து
தோகையது மாற்று வித்தா
யாழ்கடல் விடத்தையமு தாகவர னுண்டதென்
னம்மை யுன்கைத் திறமையே. 40

திறமையுற் றிடுநம் மிறையவற் குனது
திருமலர்க் கரநன் மாலையா
திறைதவத் திலேடு பிறவியற் றேருவ
னிருமலக் கடவு ணிருபனே

குறைவறப் பேருமை வரவரப் பரம
குருவேனத் திறமு டையனே
முறைமுறைப் பிறவி யறுகமுத் தருளே
முதல்வழுத் துமவர் பதுமையே. 41

ஆறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

பதும மலரா னடிபரவும்
பங்கே ருகத்தாள் பணிந்தரனூர்
நிதமுந் துடைக்குந் தொழில் பேற்ருர்
நெடியோ னளிக்கு நிலைபேற்ருன்
சதுர் மாமுகனுஞ் சராசரங்கள்
படைத்தா னென்றே சாற்றுமறை
யதனு லுனது திருவருளே
யல்லா துளவோ வம்பிகையே. 42

அம்பிகை யுனது சேமத்
தரும்பொருள் புகழ்ந்த ஞானி
தம்பிரா னடியைச் சாருந்
தவங்களா லுவக்கச் செய்தாய்
வம்பனே னவங்கள் கொண்டு
வாழ்த்துதற் கிரங்கு மாறீ
தெம்பிரான் முடிமேற் கொன்றை
யெருக்குட னிருக்கு மாபோல் 43

போதி லயன்ருழு மானேயுன்
பூரணச் சந்திரன் மாமோக
ஞதி முகங் குளிர் வாழ்வாலே
ஞான மெனும்பொரு ளுடாயோ
வோதிம மென்னடை மாதாவே
யோதுவ னேன்பிழை பாராயே
யாதி சவுந்தரி மாமோகி
யாயி,ம தங்கி டாதாரி. 44

எதிர்காலம்

ஜோதிஷார்ணவம், பிர்மஸ்ரீ. கே. முத்துஜோதிடர் அவர்கள்,
திருவிடைமருதூர்.

(சார்வரிஷ ஆடிமீ 1உ முதல் 31உ முடிய)
(16—7—60 முதல் 15—8—60 முடிய)

1. மேஷம். அசுவதி - பரணி - கார்த்திகை ¼

அசுவதி நக்ஷத்திரம் நான்கு பாதங்களும் மிச்ர பலனைத் தரும். கிரய விக்கிரயங்களும், தொழில் மாற்றமும், லாபவிரயம் சமதையாகவும் இருக்கும். பரணி முதல் பாதம் ஆடை ஆபரணச் சேர்க்கையும், சுபசந்தோஷங்களும், இல்லற சுகமும் ஓங்கும். பரணி 2, 3, 4 பாதங்களும், கார்த்திகை முதல் பாதமும் சரியாக இராது. சகல காரியங்களையும் தடுக்கச் செய்யும். மனம் சாந்தி அடையாது. தெய்வபலம் குறைந்து காட்டும். புதன், வியாழன் சுபமாகும்.

2. விருஷபம். கார்த்திகை ¾, ரோஹிணி - மிருகசீர்ஷம் ½

கார்த்திகை 2, 3, 4 பாதங்களும், ரோகிணி நான்கு பாதங்களும் அதிக கஷ்ட நஷ்டங்களையும், ஆரோக்கியக் குறைவையும், தொழில் கவலையையும் தரும். கிரய விக்கிரயங்களில் நஷ்டம் காட்டும். செய் காரியங்கள் தடைபடும். மிருகசீர்ஷம் 1, 2 பாதங்கள் பெரியோர் சேர்க்கை, வித்தியா விருத்தி, தொழில் விருத்தி, குடும்ப விருத்தி முதலியவைகளையும் தரும். வெள்ளி, சனி சுபமாகும்.

3. மிதுனம். மிருகசீரிஷம் ½, திருவாதிரை - புனர்பூசம் ¾

மிருகசீர்ஷம் 3, 4 பாதங்களும், திருவாதிரை 1, 2 பாதங்களும் சமபலனைத் தரும். மேலோர் பெரியோர் அன்பு கிட்டும். ஆரோக்கியம் உண்டாகும். திருவாதிரை 3, 4 பாதங்களும், புனர்பூசம் 1, 2, 3 பாதங்களும் வியவகார வெற்றியையும், சத்ரு பராஜயத்தையும் தந்து நஷ்டமான பொருள் வரத்தையும்,

கிரய விக்கிரயங்களையும், இல்லற சுகத்தையும் தரும். புதன், வியாழன் சுபமாகும்.

4. கடகம். புனர்பூசம் $\frac{1}{4}$, பூசம் - ஆயில்யம்

புனர்பூசம் 4ம் பாதமும், பூசம் நான்கு பாதங்களும் சுபத்தைத் தரும். வித்தியா விருத்தியும், ஞான விருத்தியும், குடும்ப விருத்தியும் ஏற்படும். ஆயில்யம் நான்கு பாதங்களும் எதிர்பாராத சகல நன்மைகளையும் தந்து இல்லற சுகபோகங் களையும், தோழில் மேன்மையையும் தரும். நினைத்த காரியம் எல்லாம் கைகூடும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

5. சிம்மம். மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$

சிம்மராசி 9 பாதங்களும் உத்தியோக உயர்வு, கிரக சுகம், ஸ்தாவர ஜங்கம சொத்து சேர்தல், கிரய விக்கிரயங்கள், தோழில் ஏற்றம், புத்திராதிகளால் சுகம். சகல நன்மைகளும் தரும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

6. கன்னி. உத்திரம் $\frac{3}{4}$, ஹஸ்தம் - சித்திரை $\frac{1}{2}$

கன்னியாராசி 9 பாதங்களும் சுபமாகவே நடக்கும். தெய்வ பலம் முன்னிற்கும். அசாத்தியமெல்லாம் சுலபசாத்தியமாகும். அடிக்கடி சஞ்சார பலனுக்குத் தெய்வீகத் தோற்றங்களும் ஏற்படச்செய்யும். மத்தியில் சிற்சில சமயங்களில் மன வேற்றுமையும், அச்சத்தையும் உண்டாகி மறையும். பிராசீன தர்மமும், பெரியோர் ஆசியும் முன்னிற்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

7. துலாம். சித்திரை $\frac{1}{2}$, சுவாதி - விசாகம் $\frac{3}{4}$

சித்திரை 3, 4 பாதங்கள் சுபமிராது. வீண் அலைச்சலும், தோழில் நஷ்டமும் உண்டுபண்ணும். சுவாதி நான்கு பாதங் களும் தெய்வபலத்தால் ஓடும். கீர்த்திபத்திரம் கிடைக்கும். வெகுகாலம் எதிர்பார்த்து நடவாத காரியம் எல்லாம் சாத்திய மாகும். விசாகம் 1, 2, 3 பாதங்கள் கவலையை உண்டு பண்ணும். சதா மனக்குழப்பமும், காரியங்கள் தவக்கப் படுதலும் ஏற்படும். சனி, செவ்வாய் சுபமாகும்.

8. விருச்சிகம். விசாகம் ¼, அனுஷம் - கேட்டை.

விசாகம் 4ம் பாதம் தூரப் பிரயாணத்தையும், சரீரத்திற்கு ஆரோக்கியக் குறைவையும் தரும். அனுஷம் நான்கு பாதங் களும் சுபாதிகளையும் அதிகச் செலவினங்களையும் கொடுக்கும். கேட்டை நான்கு பாதங்களும் மேலும் மேலும் சந்தோஷத்தைத் தரும். குடும்பம் ஓங்கும். உத்தியோக உயர்வும், நல்லோர் பேரியோர் அன்பும் கிட்டும். ஆரோக்கியம் தரும். சனி, செவ்வாய் சுபமாகும்.

9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

மூலம் நான்கு பாதங்களும், பூராடம் நான்கு பாதங்களும் சமபலனைத் தரும். வியாதி நீங்கும். கடன் நிவர்த்தியாகும் குடும்பம் சீரானமுறையில் நடக்கும். உத்திராடம் முதல் பாதம் சுப சந்தோஷங்களையும், ஆரோக்கியத்தையும் தந்து கிரக சுகத்தைத் தரும். தனதான்ய விருத்தியும், தொழில் விருத்தியும் ஏற்படும். செவ்வாய், புதன் சுபமாகும்.

10. மகரம். உத்திராடம் ¾, திருவோணம் - அவிட்டம் ½

உத்திராடம் 2, 3, 4 பாதங்கள் சுபமிராது. மனைவாக் காயங்களால் துன்பம் உண்டுபண்ணும். திருவோணம் நான்கு பாதங்களும் உத்தியோக மேன்மையைத் தரும். ஸ்திரவாசமும் சுகவாசமும் ஏற்படச்செய்யும். மேலோர் பேரியோர் அன்பு கிட்டும். தெய்வபலத்தால் எல்லாம் ஜயிக்கும். அவிட்டம் 1, 2 பாதங்கள் சுபமாகும். உத்தியோக உயர்வு, பேரியோர் அன்பு அசாத்திய சாதனங்கள் ஏற்பட்டு மனம் சந்தோஷம் அடையும். புதன், வியாழன் சுபமாகும்.

11. கும்பம். அவிட்டம் ½, சதயம் - பூரட்டாதி ¾

அவிட்டம் 3, 4 பாதங்கள் சகல போகங்களையும், சௌக்கியங்களையும் தரும். நூதன ஆடை ஆபரணச் சேர்க்கை களையும், இல்லற சுகத்தையும் தரும். சதயம் நான்கு பாதங் களும், பூரட்டாதி மூன்று பாதங்களும் விசேஷ நன்மைகளைத் தந்து ஸ்தாவர ஜங்கம சொத்துக்களையும் தரும். சுகவாழ்வு உண்டாகும். புதன், வெள்ளி சுபமாகும்.

12. மீனம். பூரட்டாதி ¼, உத்திரட்டாதி - ரேவதி.

பூரட்டாதி நான்காம் பாதம் சுபமிராது. வீண் அலைச்சலும் அதிகச் செலவும் உண்டுபண்ணும். உத்திரட்டாதி நான்கு பாதங்களும், ரேவதி நான்கு பாதங்களும் கிரக சுகத்தோடு ஸ்திர ஜீவனமும், உத்தியோக உயர்வும், மேலோர் பெரியோர் அன்பும், தெய்வீகத் தோற்றமும் ஏற்படச்செய்யும். கவலைகள் நீங்கும். சனி, செவ்வாய் சுபமாகும்.

குறிப்பு :- ஷை மாதம் சிற்சில இடங்களில் இயற்கைக் கோளாறுகள் ஏற்பட்டு சொத்திற்கும் ஜீவனத்திற்கும் சேதம் விளைவிக்கும். அதர்மத்தால் நிலை மாறிகாட்டும். தெய்வபலம் ஒதுங்கிநிற்கும். ஜாதி மத குல தர்மங்களையும், பிராசீன தர்மங்களையும் கைவிடாது காப்பாற்றிக்கொண்டுவரும். சாதுக்களின் ஹிருதயத்தில் ஸர்வேச்வரன் சதா ஸாந்நித்யம் அடைந்து கொண்டு அவர்களின் பொருட்டு மற்றவர்களையும் காப்பதற்கு அருள் செய்வார். கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்பது திண்ணம்.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam
Velur Sri Vaithianathaswami Devasthanam
Vaithiswarankoil

My visit to the temple today after the lapse of almost a decade made me the doubt whether it was the old Vaithiswarankoil. The improvements are striking - Unlike other temples managed by Executive Officers, all the sannadhis are maintained neatly & well lighted and the services of the temple priests satisfactory. The credit should go to the local management.

Sd. M. Anantharaman,
Retired Deputy Registrar of Co-op-Societies
7—2—60.